# ஆண்டறிக்கை 2018

## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

## உள்ளடக்கஅட்டவணை


| | பக்க இல. |
|---|---|
| தலைவரின் செய்தி | 01-02 |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 03-04 |
| தூரநோக்கும் இலட்சியநோக்கும் | 05 |
| அறிமுகம் | 06 |
| முகாமைத்துவச் சபை | 07-08 |
| நிறைவேற்றுப் பொழிப்பு | 08-11 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு 2018 | 11-13 |
| இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினைத் தாபித்தல் | 13 |
| இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகள் | 13-15 |
| சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் இணக்கப்பாடுகளை அமுல்படுத்துதல் | 15-16 |
| அதிகாரமளித்தல் (அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரங்கள்) | 16-20 |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு | 20 |
| பாதுகாப்புக் களப்பரிசோதனைகள் மற்றும் அமுலாக்கம் | 21-22 |
| அணு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு | 23-25 |
| கழிவு முகாமைத்துவம் மற்றும் கதிரியக்க மூலங்களின் போக்குவரத்து | 25-27 |
| அவசரநிலையினை எதிர்கொள்ளல் | 27 |
| அவசரநிலைக்கான தயார்படுத்தல்கள் மற்றும் எதிர்கொள்ளல் பயிற்சிகள | 27-29 |
| கௌரவ திரு. யுகியா அமானோ, ஐஏஈஏ இன் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ விஜயம் 2018 மார்ச் 15 | 30 |
| மனிதவள முகாமைத்துவம் | 31-39 |
| 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதிக்கூற்றுக்கள் | 40-66 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 67-78 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான கருத்துரைகள் | 79-82 |

## தலைவரின் செய்தி



இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் வெற்றிகரமான பயணத்தின் நான்காவது ஆண்டு பூர்த்தியில் இச்செய்தியினை மகிழ்ச்சியுடன் பதிவுசெய்கின்றேன். கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் அணுப் பராமரிப்பின் ஒழுங்குபடுத்தல் உட்கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கு அத்தியாவசியமான பல்வேறு ஆவணங்களை வரைவதற்கு முடிந்தமையால் 2018 ஆம் ஆண்டு பேரவைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமைந்திருந்தது.

மீளாய்வாண்டில் பேரவை, ''அயனாக்கல் கதிர்வீச்சுப் பாதுகாப்பு பிரமாணங்கள்'' மற்றும் ''உற்பத்தி, பாவனை மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பிற்கான பிரமாணங்கள்'' என்ற இரண்டு பிரமாணங்களையும் தேசிய அணு அல்லது கதிரியக்க விபத்துக்கள் முகாமைத்துவ திட்டத்தையும் வரைந்திருந்தது. பேரவையினால் வரையப்பட்ட ''கதிரிக்கத் தொழிலாளர்களின் தகைமைகளிற்கான அளவுகோள்கள் மீதான விதி'' 15 ஆர்வமுள்ள தரப்பு நிறுவனங்களிற்கு அவற்றின் அபிப்பிராயம் மற்றும் அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டது. பெற்றுக்கொண்ட கருத்துரைகளை மீளாய்வுசெய்த பின்னர், கதிரியக்கத் தொழிலாளர்களின் தகைமை விதிக்கான வரைவினை முடிவாக்குவதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 2018 திசெம்பர் 24 ஆந் திகதி அவர்களுடன் வட்டமேசை கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. அப்பேச்சுவாத்தையினை அடிப்படையாகக் கொண்டு தற்போது இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரகாரம், உயர் நீதிமன்றத்தில் வழக்காடப்பட வேண்டிய குற்றங்களை செவிமடுப்பதற்காக உயர் நீதிமன்றமொன்றை பெயர் குறிப்பிடுதல் வேண்டுமென்ற தேவை காணப்படுகின்றது. சட்டத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறு உயர் நீதிமன்றத்தில் வழக்காடப்பட வேண்டிய குற்றங்களை செவிமடுப்பதற்காக, பேரவையுடன் இணைந்து நீதி அமைச்சும் சட்ட வரைஞர் திணைக்களமும் கொழும்பு நீதிமன்ற வலயத்திலுள்ள இலங்கை உயர் நீதிமன்றத்தை பிரேரிப்பதற்கான பிரமாணமொன்றை வரைந்தன. இந்தப் பிரமாணம் நீதி அமைச்சினால் 2050/34 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன் அதன் பின்னர் 2018 மார்ச் 20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

விஞ்ஞான மற்றும் நிர்வாக ரீதியான வேலைகளிற்காக பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் போதியளவு எண்ணிக்கையான ஆட்களின்றி புதிய பேரவையினால் வினைத்திறனாக தொழிற்பட முடியாது என்பது புரிந்துகொள்ளப்பட்டமையால், ஆட்சேர்ப்பிற்கும் மனித வள அபிவிருத்திக்கும் பேரவையின் முகாமைத்துவச் சபை இவ்வாண்டில் முன்னுரிமையளித்து செயற்பட்டது. அதன் விளைவாக, 2018 மார்ச் இல் பேரவையின் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தினைப் பின்பற்றி புதிதாக எட்டு முகாமைத்துவ உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் களப்பரிசோதனை நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக மேலும் சில விஞ்ஞான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க வேண்டிய தேவை காணப்படுவதனால், 04 விஞ்ஞான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தைக் கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் பேரவை தொடர்பாடலை மேற்கொண்டு வருகின்றது.

கதிர்வீச்சுப் பாதுகாப்பு, ஏற்றுமதி / இறக்குமதிக் கட்டுப்பாடு, போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் கழிவுப் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சிகளைப் பெறுவதற்காக விஞ்ஞான உத்தியோகத்தர்களிற்கு பல வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தினால் மலேசியாவில் நடாத்தப்பட்ட கதிர்வீச்சு பாதுகாப்பு மீதான ஆறு மாத பட்டப் பின்படிப்பு திப்ளோமா பாடநெறியினை தொடர்வதற்கு விஞ்ஞான உத்தியோகத்தர் ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இந்த திப்ளோமா பாடநெறியிலிருந்து அவர் பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் அனுபவங்கள் ஒழுங்கமைத்தல் வேலைகளை அபிவிருத்தி செய்வதற்கு பேரவைக்கு உறுதுணையாக அமையவுள்ளது.

1957 முதல் இலங்கை சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தில் (ஐஏஈஏ) அங்கத்துவம் வகித்து வருவதுடன் ஐஏஈஏ இல் அங்கத்துவம் பெற்றதிலிருந்து அணுப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் அநேக சாசணங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உடன்படிக்கைகளின் தரப்பாக இலங்கையும் காணப்படுகின்றது. அதிகாரச்சட்டத்தின் 12(உ) பிரிவின் பிரகாரம் பேரவையானது இலங்கை ஒரு தரப்பாக உள்ள மேற்படி சாசணங்கள், ஒழுங்குவிதிகளிற்குரிய இலங்கையின் கடப்பாடுகளை

நிறைவேற்றும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. அதற்கமைய, மேலதிக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து பேரவை ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இந்த உடன்படிக்கையினை இலங்கையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை தயாரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

கதிர்வீச்சு அல்லது அணு விபத்து அவசரநிலைமைகளில் உதவுதல் மீதான மாநாடு மற்றும் அணு விபத்துக்களின் போது அறிவித்தல் மீதான மாநாடு என்பவற்றின் கீழ் ஐஏஈஏ இன் சர்வதேச விபத்துக்கள் நிலையத்தினால் (IAEA - IEC WEB) நடாத்தப்பட்ட ஐஏஈஏ இன் ''கொன்வெக்ஸ்'' என்ற மாநாட்டில் பேரவை கலந்துகொண்டது. அணு அல்லது கதிர்வீச்சு விபத்துக்கள் மீதான ஐஏஈஏ இன் சர்வதேச விபத்துக்கள் நிலையத்தின் இணையதளத்தின் ஊடாக 2018 மார்ச் 08, 2018 ஒக்தோபர் 09, 2018 ஒக்தோபர் 15 மற்றும் 16 அத்துடன் 2018 நவம்பர் 27 ஆகிய திகதிகளில் 04 கொன்வெக்ஸ் பயிற்சிகள் நடாத்தப்பட்டன. ஐஏஈஏ இன் தொடர்பாடல் முறைமை, மற்றும் அணு மற்றும் கதிர்வீச்சு விபத்து நிலைமைகளில் ஐஏஈஏ இன் சர்வதேச விபத்துக்கள் நிலையத்தின் தொடர்பாடல் முறைமையின் அடிப்படையிலமைந்த இணையதளத்தினூடாக ஐஏஈஏ உடனும் ஏனைய நாடுகளுடனும் தொடர்பாடல் செய்யும் முறையினை அறிந்துகொள்வதற்கு இப்பயிற்சிநெறிகள் பேரவைக்கு பயன்பட்டன.

கௌரவ திரு. யுகியா அமானோ, ஐஏஈஏ இன் பணிப்பாளர் நாயகம் அவர்கள் 2018 மார்ச் 15 ஆந் திகதி இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு வருகைதந்திருந்தார். அவரது வருகையினை கௌரவிக்கும் விதத்தில் அன்றைய தினம் பேரவையினதும் இலங்கை அணுசக்திச் சபையினதும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் விசேட விழாவொன்று நடாத்தப்பட்டது. பேரவையின் பணிப்பாளர் நாயகம் தனது உரையில் ஐஏஈஏ இன் தேவைப்பாடுகளிற்கு இணங்க அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் தற்போது இலங்கையில் காணப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் உட்கட்டமைப்புகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். இலங்கையில் அணுத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கைக்கு ஈஏஈஏ இனால் வழங்கப்படுகின்ற உதவிகளிற்காக இராஜாங்க அமைச்சர் அவரது உரையில் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

அணுத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையின் அதிகாரத்தரப்புக்களுடன் எல்லாவேளையிலும் ஐஏஈஏ தனது ஒத்துழைப்பினை வழங்குமென கௌரவ யுகியா அமானோ தனது உரையில் குறிப்பிட்டதுடன் பேரவையின் எதிர்காலக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு ஐஏஈஏ உதவும் என அவர் மேலும் குறிப்பிட்டார். ஐஏஈஏ இன் பணிப்பாளர் நாயகத்தின் விஜயம் இலங்கைக்கும் ஐஏஈஏ இற்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பினை மேலும் பலப்படுத்தும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

முடிவுரையாக, எமது பேரவையின் முன்னேற்றத்திற்குரிய பெறுமதிமிக்க கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபை உறுப்பினர்களிற்கு வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்கியமைக்காக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், பேரவையின் பிரமாண உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதில் ஒத்துழைப்பு நல்கிய இலங்கை அணுசக்தி சபையின் தலைவர் மற்றும் நிபுணர்களிற்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக, பேரவையின் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆண்டு முழுவதும் அயராது ஒத்துழைத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் செயற்படுகின்ற பேரவையின் அனைத்து பதவியணி உத்தியோகத்தர்களிற்கும் கௌரவ அமைச்சர் அவர்களிற்கும் கௌரவ பிரதி அமைச்சர் அவர்களிற்கும் அமைச்சின் பதவியணியினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அனைவருக்கும் எனது நன்றிகளும் வாழ்த்துக்கள்.

சுமிந்த ஜயசேகர
தலைவர்
**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை**

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



2018 ஆம் ஆண்டின் செயற்பாடுகளை முன்வைக்கும் பேரவையின் நான்காவது ஆண்டறிக்கைக்கு இச் செய்தியினை பதிவுசெய்வதற்கு முடிந்தமை குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பேரவையின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் பேரவையினது ஒழுங்குபடுத்துதல் உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியாகவும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடிந்திருந்தது.

ஆண்டின் போது 392 அனுமதிப்பத்திரங்களையும், 810 ஏற்றுமதி இறக்குமதி அங்கீகாரங்களையும், கதிர்வீச்சற்ற அறைகளிற்காக 157 அங்கீகாரங்களையும் பேரவைக்கு வழங்க முடிந்திருந்தது. அத்துடன், பால் உணவுகளின் விடுவித்தல்களிற்காக இலங்கை அணுசக்திசபையின் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளின் மீது 984 விடுவிப்புச் சான்றிதழ்களையும் பேரவை வழங்கியது. பிரமாணங்களிலுள்ள தேவைப்பாடுகளை மூலங்கள் மற்றும் வசதிகள் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, புதிய வசதிகளிற்கும் ஏற்கனவேயுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள வசதிகளிற்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் பௌதீக களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அனுமதியின்றி கதிர்வீச்சு மூலங்களை பயன்படுத்துவோரை கண்டுபிடிப்பதற்காக திட்டமிடப்படாத திடீர் களப்பரிசோதனைகளை பேரவை மேற்கொண்டிருந்தது. மொத்தமாக 260 களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய அமெரிக்க குடியரசின் எரிசக்தி திணைக்களத்தின் உலகலாவிய பொருட் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணையுடன் பௌதீக பாதுகாப்பு வழங்கப்படுகின்ற வசதிகளுக்காக பாதுகாப்பும் பராமரிப்பும் உள்ளடக்கப்பட்டன. ஐஏஈஏ வகை – 1 கதிர்வீச்சு வசதிகளிற்காக வழங்கப்பட்டுள்ள சர்வதேச நியமங்களின் தேவைப்பாடுகளிற்கேற்ப பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு முறைமைகளின் தகைமையினை பரிசோதிப்பதற்காக களப்பரிசோதனையின் போது பயன்படுத்துவதற்கென பரீட்சித்தல் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் உதவியுடன் ''தேசிய கதிரியக்க எதிர்கொள்ளல் கோவையினை'' (NRTRC) பேரவை வரைந்தது. வரைவினை மீளாய்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துரைகளுடன் தயாரிக்கப்பட்ட இறுதி வரைபு, சபையின் ஆலோசனைக்கமைய தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. பல்வேறு ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டு இறுதி ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே பௌதீக பாதுகாப்பு முறைமைகள் பொருத்தப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வேலைத்தள பாதுகாப்பு திட்டங்களை தயாரித்தல் தொடர்பில் பேரவையின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ள தரப்பினர்களிற்குப் பயிற்சியளிப்பதற்காக ஐக்கிய அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் பூகோல பொருட் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் இரண்டு செயலமர்வுகளை பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டில் கதிர்வீச்சுக் கழிவுகளை பராமரித்து பாதுகாப்பதனை ஒழுங்குபடுத்துவதற்கான பொறுப்பு பேரவைக்கு உள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட 53 பயன்படுத்திய கதிரியக்க மூலங்களையும் 7 ஈரலிப்பு அடர்த்தி சுறுள்களையும் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள லொஸ் அலாமஸ் ஆய்வுகூடத்திற்கு மீள அனுப்பிவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை பேரவை மேற்கொண்டிருந்தது. இதனுடன் தொடர்புபட்டிருந்த சர்வதேச போக்குவரத்துச் செலவினம் மற்றும் அகற்றல் செலவினம் ஆகியவற்றை ஐக்கிய அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் பூகோல பொருட் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் பொறுப்பேற்றிருந்ததுடன் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் போக்குவரத்துப் பிரமாணத் தேவைப்பாடுகளிற்கு அமைவாக போக்குவரத்திற்கான கொள்கலன்களைத் தயாரித்தல் வேலைகள் பேரவையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கதிரியக்க கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் இலங்கை அணுசக்தி சபையின் தொழிற்பாடாக காணப்படுகின்றது. ஆகையால், தேசிய பயன்படுத்திய மூலங்கள் களஞ்சிய வசதியிலிருந்து சாத்தியமான மூலங்கள் அகற்றப்பட்ட பின்னர், அதன் பொறுப்பிலுள்ள அனைத்து எஞ்சிய மூலங்களும் விரிவான பட்டடியல் ஒன்றில் உள்ளடக்கப்பட்டு (மூலங்கள் பொருட்பதிவேடு) 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி இலங்கை அணுசக்தி சபைக்கு கையளிக்கப்பட்டது.

2018 நவம்பர் 12 – 16 ஆந் திகதி வரையான காலத்தில், ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களை உள்ளடக்கிய தேசிய அணு அல்லது கதிரியக்க விபத்துக்கள் முகாமைத்துவத் திட்டம் ஐஏஈஏ இன் நிபுணரினால் (கலாநிதி மார்ஜன் ரிகாவ்சி) மீளாய்வு செய்யப்பட்டதுடன் அவரது ஆலோசனையின் பிரகாரம் வரைவிற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் இறுதித் திட்டம், தற்போது விபத்து நிலைமைகளிற்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பணிப்பாளரின் உதவியுடன் என்னால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அணு அல்லது கதிரியக்க ஆபத்து நிலைமைகளை எதிர்கொள்கின்ற ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் இரசாயண, உயிரியல், கதிரியல், அணு மற்றும் வெடிப்புக்கள் குழுக்களிற்கு (CBRNE) பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பேரவை நடாத்தியது. அத்துடன், பொறுப்புடைய படைகளின் உத்தியோகத்தர்களிற்காக கடுகுருந்த மற்றும் களுத்துறையிலுள்ள விசேட அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலையின் ஒத்துழைப்புடன் கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் கதிரியக்க விபத்து முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சிப் பாடநெறிகளும் நடாத்தப்பட்டன.

ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் ஆண்டில் அடையப்பட்ட செயன்முன்னேற்றத்திற்கமைய, தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் ஒழுங்கமைத்தல் பணிகளை அமுல்படுத்தவதற்காக அதிகாரச்சட்டத்தினால் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு முடிந்திருந்தமையால் 2018 ஆம் ஆண்டு பேரவைக்கு மிக வெற்றிகரமான ஆண்டாக காணப்பட்டது.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சிற்கும், தலைவர் மற்றும் முகாமைத்துவ சபையினருக்கும் 2018 ஆம் ஆண்டிற்கான மேற்படி செயன்முன்னேற்றத்தினை அடைந்துகொள்வதற்கு உதவிபுரிந்த எனது பதவியணியினருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன

எச.எல். அனில் ரன்ஜித்
பணிப்பாளர் நாயகம்
**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை**

## தூரநோக்கு

அயனாக்கல் கதிர்வீச்சின் சாத்தியமிக்க பாதகமான தாக்கங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டதோர் நாடு

பயனுறுதியான மற்றும் வினைத்திறன் கொண்ட பிரமாண கோவையொன்றின் மூலம் அயனாக்கல் கதிர்வீச்சின் சாத்தியமிக்க பாதகமான தாக்கங்களிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சு தொழிலாளர்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாத்தல்



## அறிமுகம்

அயனாக்கல் கதிர்வீச்சின் சாத்தியமிக்க பாதகமான தாக்கங்களிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சு தொழிலாளர்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாப்பதற்கும் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவதற்கும் தேவையான பிரமாண சட்டக்கோவையினை உருவாக்கி அமுல்படுத்தும் அதிகாரத்துடன் 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தினால் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (எஸ்எல்ஏஈஆர்சீ) தாபிக்கப்பட்டது. அதிகாரச்சட்டத்தலுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சகல கதிர்வீச்சு மற்றும் கதிரியக்க பாவனையாளர்களிற்காக அனுமதிப்பத்திரமளித்தல் களப்பரிசோதனை, கதிரியக்க பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல், கதிரியக்க கழிவு முகாமைத்துவம், கதிரியக்க பொருட்களின் பௌதீக பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலமைகளை எதிர்கொள்வதற்கான இயலுமை அபிவிருத்தி, சர்வதேச அணுசக்தி முகவராண்மையுடனான (ஐஏஈஏ) பாதுகாப்பு உடன்படிக்கையிலுள்ள இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுதல் என்பவற்றிற்காக முறைமையொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் மேற்படி விடயங்களிற்குத் தேவையான சட்டரீதியானதும் பிரமாண ரீதியானதுமான கட்டமைப்பொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் இந்த அதிகாரச்சட்டம் பேரவையினை வேண்டுகிறது. அத்துடன் பேரவையானது அணுசக்தி தொடர்பில் இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைகள் மற்றும் சாசனங்களிற்கான மத்திய நிலையமாகவும் தொழிற்படுதல் வேண்டும்.

அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் தலைவரொருவரையும் பேரவையின் உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பின்வருமாறு தலைவர் உள்ளிட்ட ஐந்து உறுப்பினர்களை பேரவை கொண்டிருக்கும்.

(அ) கதிர்வீச்சியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அல்லது கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பில் நிபுணத்துவமுடைய மூன்று நபர்கள்

(ஆ) பேரவையின் குறிக்கோள்களுடன் தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்ட சட்ட அனுபவமுள்ள நபரொருவர்

(இ) மேலதிகச் செயலாளர் என்ற பதவிக்குக் குறையாத சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது சுற்றாடல் என்ற விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலிருந்து அந்த அமைச்சரால் நியமிக்கப்பட்ட பனிப்பாளர் ஒருவர்

2015 இன் முதலாம் காலாண்டில் பேரவை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் செயற்பட்டதுடன் அதன் பின்னர் மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது.

அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பேரவையின் குறிக்கோள்கள் வருமாறு

(அ) அயனாக்கல் கதிர்வீச்சுக்காக வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய இடர்களிலிருந்து ஆட்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல் மற்றும் மூலங்களினதும் வசதிகளினதும் பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் தொடர்பான தேவைப்பாடுகளை உரிய முறையில் தாபித்தல்.

(ஆ) எவையேனும் மூலம், கதிர்வீச்சுப்பொருள் மற்றும் ஏனைய கதிரியக்க பொருள் காரணமாக ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களிலிருந்து பொதுமக்களும் சுற்றாடலும் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் மற்றும் அவ்வாறான பொருட்கள் மற்றும் வசதிகள் தொடர்பில் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்தல், அத்துடன்

(இ) இலங்கையினால் இணங்கியொழுகுவதற்குத் தேவையான கதிர்வீச்சு எரிசக்தி துறையின் சர்வதேச நியமங்கள் மற்றும் பொறுப்புக்களுடன் இணங்குவதனை உறுதிப்படுத்துதல்.

அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் பேரவையின் பதவியணி உறுப்பினர்களாக செயற்பட விருப்பம் தெரிவித்த 19 ஊழியர்களுடன் பேரவை தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. பேரவையின் ஆட்சேர்ப்புத் திட்டம் 41 பதவியணியினருடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள தேவைப்பாடுகளிற்கமைய ஆட்சேர்ப்புச் செயன்முறையில் பேரவை ஈடுபட்டுள்ளது.

## முகாமைத்துவச் சபை

அமைச்சரினால் ஐந்து சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை அதிகாரச்சட்டம் கொண்டிருப்பதுடன், அவர்களில் ஒருவர் 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவிற்கு இணங்க சுற்றாடலுக்கு பொறுப்பான அமைச்சரினால் முன்மொழியப்பட்ட நிறைவேற்று உறுப்பினராவார்.

2018 சனவரி 01 தொடக்கம் 2018 ஒக்தோபர் 29 வரையிலான காலத்திற்குரிய முகாமைத்தவச் சபை அங்கத்தவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி |
|---|---|
| கலாநிதி சமன் ஹேவாமான்ன | தலைவர் |
| பேராசிரியர். கே.ஆர். ரன்ஜித் மஹானாம | உறுப்பினர் |
| திருமதி. ஜே.எம்.சீ. மாலினி ஜெயவர்தன | உறுப்பினர் |
| திரு. டீ.ஜீ.எல். விக்ரமாநாயக்க | உறுப்பினர் |
| திரு. எம்.ஜீ.டபிள்யூ.எம்.டபிள்யூ.ரீ.பீ. திஸாநாயக்க | உறுப்பினர் |
| திருமதி. கே.வீ.ஐ. மல்லிகா | அவதானிப்பாளர், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| திரு. ஜீ.ஐ. கங்கநாத் பெரேரா | அவதானிப்பாளர், நிதி அமைச்சு 2018.01.01 முதல் 2018.02.05 வரை |
| திரு. ஆர்.எம்.ஜே. ரஸ்நாயக்க | அவதானிப்பாளர், பொதுத் திறைசேரி 2018.02.21 முதல் 2018.10.29 வரை |

2018 ஒக்தோபர் 30 முதல் 2018 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்குரிய முகாமைத்தவச் சபை அங்கத்தவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி |
|---|---|
| திரு. அனுர ஜயசிரி | தலைவர் |
| பேராசிரியர். கே.ஆர். ரன்ஜித் மஹானாம | உறுப்பினர் |
| திருமதி. ஜே.எம்.சீ. மாலினி ஜெயவர்தன | உறுப்பினர் |
| திரு. எம். இஸ்மாயில் நாசர் | உறுப்பினர் |
| திரு. எம்.ஜீ.டபிள்யூ.எம்.டபிள்யூ.ரீ.பீ. திஸாநாயக்க | உறுப்பினர் |
| திருமதி. கே.வீ.ஐ. மல்லிகா | அவதானிப்பாளர், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| திரு. ஆர்.எம்.ஜே. ரஸ்நாயக்க | அவதானிப்பாளர், பொதுத் திறைசேரி |

மீளாய்வுக் காலப்பகுதியில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இயக்கச் செயற்பாடுகள், பதவியணியினர் விடயங்கள், நிதி மற்றும் நிர்வாகம் போன்ற முக்கிய விடயங்கள் கொள்கைத் தீர்மானங்களிற்காக சபைக்கு முன்வைக்கப்பட்டது. அத்துடன் பேரவையின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களை சபை மீளாய்வு செய்தது.

### பணிப்பாளர் நாயகம்

ஒழுங்கமைப்பு விடயங்கள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பில் 30 வருடகால அனுபவமுள்ள திரு. எச்.எல். அனில் ரன்ஜித் அவர்கள் அதிகாரச்சட்டத்தின் 71(1)(ஆ) பிரிவின் பிரகாரம் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் 2015 நவம்பர் 03 ஆந் திகதியிலிருந்து பேரவையின் முதலாவது பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார். இந்த நியமனத்திற்கு முன்னர் அணுசக்தி அதிகாரசபையின் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் விதிகள் தொடர்பான பிரிவில் பணிப்பாளராக திரு. ரன்ஜித் அவர்கள் பணியாற்றியுள்ளார்.

### பேரவையின் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

| பெயர் | பதவி | கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| திரு. எச்.எல். அனில் ரன்ஜித் | பணிப்பாளர் நாயகம் | பீ.எஸ்.சீ. (இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு)<br>எம்.எஸ்.சீ அணு விஞ்ஞானம் |
| திரு. ரீ.எச்.எஸ். சாந்த | பணிப்பாளர் (அதிகாரமளித்தல்) | பீ.எஸ்.சீ. (இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு)<br>எம்.எஸ்.சீ அணு விஞ்ஞானம் |
| திரு. கபில தி சில்வா | பிரதிப் பணிப்பாளர் | பீ.எஸ்.சீ. (சிறப்பு) இரசாயணவியல்<br>எம்.எஸ்.சீ அணு விஞ்ஞானம்<br>கதிர்வீச்சு பாதுகாப்பியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (மலேசியா) |
| திரு. கே.என்.ஆர். பர்ணாந்து | பிரதிப் பணிப்பாளர் | பீ.எஸ்.சீ. (இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு)<br>எம்.எஸ்.சீ அணு விஞ்ஞானம்<br>கதிர்வீச்சு பாதுகாப்பியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (மலேசியா) |
| திரு. கே.பி.ஐ.கே. கடதுன்ன | பிரதிப் பணிப்பாளர் | பீ.எஸ்.சீ. (இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு)<br>எம்.எஸ்.சீ அணு விஞ்ஞானம்<br>கதிர்வீச்சு பாதுகாப்பியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (மலேசியா) |
| திரு. எஸ்.எஸ். கொலம்பகே | பிரதிப் பணிப்பாளர் | பீ.எஸ்.சீ. (சிறப்பு) உடலியல் (இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு)<br>எம்.எஸ்.சீ அணு விஞ்ஞானம்<br>கதிர்வீச்சு பாதுகாப்பியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (மலேசியா) |
| செல்வி. ஈ.டீ.ஆர். பிரபானி | சட்ட உத்தியோகத்தர் | எல்.எல்.பீ. (கொழும்பு), சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு |
| திருமதி. ஏ.கே. சந்திரசேகர | கணக்காளர் | க.பொ.த. (உ/த) பரீட்சை |
| திரு. டபிள்யூ.ஏ.கே. லக்ஷான் | உள்ளகக் கணக்காய்வாளர் | க.பொ.த. (உ/த) பரீட்சை |

## நிறைவேற்றுப் பொழிப்பு

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டமானது 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்த பின்னர் 2018 ஆம் ஆண்டானது பேரவைக்கு நான்காவது ஆண்டாக அமைந்திருந்தது. பேரவை மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்பட்டிருந்ததுடன் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட சபை ஒன்றினால் அது முகாமைத்துவம் செய்யப்பட்டது.

பிரமாணரீதியான கட்டுப்பாட்டு முறைமையினை தாபித்து பேணிவருவதன் மூலம் அயனாக்கல் கதிர்வீச்சின் சாத்தியமிக்க பாதகமான தாக்கங்களிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சு தொழிலாளர்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டம் பேரவைக்கு ஒப்படைத்துள்ளது. அத்துடன், கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மற்றும் அவதானத்தை உறுதிப்படுத்துவதனையும் இப்பொறுப்பு உள்ளடக்கியுள்ளது. பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு என்பவற்றிற்காக நியமங்களை உருவாக்குதலும் பேரவையின் பொறுப்பாக உள்ளது.

அதிகாரச்சட்டத்திலுள்ள குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக பேரவை, அயனாக்கல் கதிர்வீச்சு மற்றும் கதிரகற்றல் பாவனையாளர்களிற்காக அனுமதிப்பத்திரமளித்தல், கதிர்வீச்சற்ற வசதிகள் களப் பரிசோதனை, கதிரியக்க பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடு, கழிவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், கதிரியக்க பொருட்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கான அங்கீகாரங்கள், பாதுகாப்புகள் மற்றும் கட்டாயப்படுத்தல் முறைமைகளை அமுல்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டது.

2018 ஆம் ஆண்டில் பேரவை பிரதானமாக அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலை முகாமைத்துவத் திட்டத்தினை இறுதியாக்குதல் மற்றும் அயனாக்கல் கதிர்வீச்சுப் பாதுகாப்பிற்கும் மூலங்களின் பாதுகாப்பிற்குமான பிரமாணங்களை வரைதல் ஆகியவற்றை பிரதான நோக்காகக் கொண்டு செயற்பட்டிருந்தது.

அத்துடன், 2015 முதல் 2018 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரமளித்தல் மற்றும் களப்பரிசோதனைகளிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களின் மூலம் தேவையான பிரமாண தேவைப்பாடுகளை உள்ளடக்கி அனுமதிப்பத்திர புதுப்பித்தல் விண்ணப்பங்கள் பேரவையால் நாளதுவரையாக்கப்பட்டன.

மூலங்களின் அனுமதிப்பத்திரங்களிற்குத் தேவையான பிரமாண உட்கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக, பின்வரும் ஆவணங்களை பேரவை தயாரித்திருந்துடன் ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் மீளாய்வுசெய்து இறுதியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

- கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமையினை அளவிடும் விதி
- அயனாக்கல் கதிர்வீச்சுப் பாதுகாப்பளித்தல் மற்றும் கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மீதான பிரமாணங்கள்
- உற்பத்தி, பாவனை, மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது கதிர்வீச்சு மூலங்களை பராமரிப்பதற்கான பிரமாணங்கள்

தேசிய கதிர்வீச்சு பாதுகாப்பு அச்சுறுத்தல்களிற்கு வினைத்திறனாகவும் உரிய நேரத்திலும் முகம்கொடுப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் (USDOE) உதவியுடன் தேசிய கதிர்வீச்சு எதிர்கொள்ளல் கோவை (NRTRC) வரைபினை தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் இணைந்து பேரவை மீளாய்வு செய்தது.

அத்துடன், பேரவை அணு அல்லது கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவத் திட்டத்தினை ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் இணைந்து மீளாய்வுசெய்து ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களையும் உள்ளடக்கி இறுதி வரைவினை தயாரித்தது. இந்தத் திட்டத்தினை மீளாய்வு செய்வதற்கு ஐஏஈஏ இன் நிபுணர்களிடம் வேண்டுகோள் விடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2018 நவம்பர் 12 – 16 இலிருந்து ஐஏஈஏ நிபுணர்கள் ஆய்வுசெய்த பின்னர் வரைபுத் திட்டம் கிடைத்திருந்தது.

பேரவையின் பதவியுயர்வுத் திட்டத்திலுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி 2018 மார்ச் மாதத்தில் எட்டு முகாமைத்துவ உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.

பேரவையின் அனுமதிப்பத்திரமளித்தல் மற்றும் களப்பரிசோதனை நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு சில விஞ்ஞான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க வேண்டியுள்ளமையால், 04 விஞ்ஞான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மேலும், 2018 ஆம் ஆண்டில் கதிர்வீச்சு மூலங்கள் மற்றும் கதிரியக்க கருவிகளைப் பயன்படுத்துகின்ற இடங்களை அவ்வப்போது பார்வையிடுவதன் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களிற்கு பல்வேறு கதிர்வீச்சுச் சேவைகளை பேரவை வழங்கியது. கதிர்வீச்சு அல்லது கதிர்நீக்கல் இயந்திரங்களை (மருத்துவ X - கதிர் உள்ளிட்ட) வைத்திருப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்காக அனுமதிப்பத்தரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்திருந்த அனைத்து நிறுவனங்களிற்கும், அதிகாரச்சட்டத்திலுள்ள தேவைப்பாடுகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியொழுகுதல் முறையாக மதிப்பிடப்பட்ட பின்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

கதிரியக்க பொருட்களின் இறக்குமதி/ஏற்றுமதிகளிற்காக அதிகாரமளித்தல்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் பேரவையின் தேவைப்பாடுகளை அடைந்துகொள்வதற்காக கதிர்நீக்கல் அறைத் திட்டங்களிற்காக பரிந்துரைகளுடன் கூடிய அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. மூலங்கள் மற்றும் கதிர்நீக்கல் அறைத் திட்டங்களின் இறக்குமதிகளிற்கான அனுமதியளித்தல் கோரிக்கைகளில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 12 (உ) பிரிவில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்தொடர்ந்து சர்வதேச உடன்படிக்கைகளில் இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பேரவை கவனம் செலுத்தியது. ஐஏஈஏ இன் வேண்டுகளிற்கமைய பாதுகாப்பை வழங்கும் மேலதிக உடன்படிக்கைகளிற்கான மாதிரிகளை மதிப்பீடு செய்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டது. மேலதிக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமாயின் அதனை அமுல்படுத்துவதற்கும் ஒரு தரப்பாக நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளுடன் இணங்குவதற்கும் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஒழுங்குகள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் பல்வேறு கலந்துரையாடல்களை பேரவை மேற்கொண்டிருந்தது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் அடிப்படையில், மேலதிக உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான இலங்கையின் விருப்பத்தினை ஐஏஈஏ இற்குத் தெரிவிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பேரவையுடன் இணைந்து மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையில் உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்கான சட்டரீதியான தேவைப்பாடுகள் உருவாக்கப்பட்ட பின்னர், உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடும் என ஐஏஈஏ இற்கு அறிவிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கமைய, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அமைச்சரவையின் தீர்மானம் ஐஏஈஏ இற்கு அறிவிக்கப்பட்டதுடன் இலங்கையில் உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை 2014 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தில் உள்ளடக்குவதற்கான திருத்த நடவடிக்கைகளில் பேரவை ஈடுபட்டுள்ளது.

பேரவையினால் வழங்கப்படுகின்ற ஒழுங்கமைப்பு சேவைகளை மேம்படுத்துவதற்கு மனித சக்தி அபிவிருத்தி அத்தியாவசியமான கூறாக காணப்படுகின்றமையால் பேரவையின் உத்தியோகத்தர்களிற்கு அநேக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதுடன் சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்கள பூகோல பொருள் பாதுகாப்பு நிகழ்ச்சிட்டத்தின் உதவியுடன் வேலைகளுடன் தொடர்பான இயலுமைகளை அபிவிருத்தி செய்வதற்காக நிபுணத்துவ சேவைகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் அயனாக்கல் கதிர்வீச்சினை பயன்படுத்துகின்ற ஆட்களிற்கு அவர்களின் கதிர்வீச்சு பாதுகாப்பு அறிவினை அதிகரித்துக்கொள்வதற்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பேரவை நடாத்தியது. அத்துடன், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அனைத்து வசதிகளிலிருந்தும் கதிர்வீச்சுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள் பின்வரும் பரப்புகளின் கீழ் தரப்படுகின்றன.

- சட்டவாக்கங்களும் பிரமாணங்களும்
- சர்வதேச உடன்படிக்கைகளும் சாசனங்களும்
- அதிகாரமளித்தல்கள் (அனுமதிப்பத்திரமளித்தல் மற்றும் அங்கீகாரங்கள்)
- இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாடு
- பாதுகாப்பு களப்பரிசோதனைகள்
- அணு மற்றும் ஏனைய கதிரியக்க பொருட்களின் பராமரிப்பு
- கழிவு முகாமைத்துவமும் கதிரியக்க பொருட்களின் போக்குவரத்தும்
- அவசர நிலைமைகளை எதிர்கொள்ளலும் திட்டமிடலும்
- மனித வளங்கள் அபிவிருத்தி
- நானாவித செயற்பாடுகள்

பேரவையிலும் நாட்டிலும் போதியளவு எண்ணிக்கையான பயிற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணர்கள் இன்மை காரணமாக சர்வதேச நியமங்களிற்கு ஏற்ப பிரமாண முறைமையினைத் தாபிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆவணங்களைத் தயாரித்தல் பேரவைக்குச் சவாலாக அமைந்திருந்தது.

அவ்வாறே, போதியளவு விஞ்ஞான உத்தியோகத்தர்கள் காணப்படாமையால், திட்டமிட்ட செயற்பாடுகளையும் களப்பரிசோதனைக்கான சில கோரிக்கைகளையும் உரிய வேளையில் நிறைவேற்றுதல் சவாலாக காணப்பட்டது.

மேற்குறித்த வரையறைகள் காணப்பட்ட போதிலும் பேரவையின் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பதவியணியினர் வழங்கிய அயராத ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் உதவிகள் காரணமாக சர்வதேச நியமங்களிற்கு ஏற்ப பேரவையின் பிரமாண மற்றும் நிர்வாக வேலைகளை முன்னேற்றுவதற்கு பேரவை உச்ச முயற்சியினை மேற்கொண்டிருந்தது.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு 2018

கணக்காய்வு மற்றம் மகாமைத்துவச் சபையானது நிதி அமைச்சின் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டிற்கான பேரவையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபையானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன் நான்கு கூட்டங்களை நடாத்தியிருந்தது.

| | | |
|---|---|---|
| பேராசிரியர். கே. ஆர். ரன்ஜித் மஹானாம, சபை உறுப்பினர் | - | கணக்காய்வுக் குழுவின் தலைவர், 2016.08.22 முதல் 2018.05.31 வரை |
| திரு. டீ.ஜீ.எல். விக்ரமாநாயக்க, (சபை உறுப்பினர்) | - | கணக்காய்வுக் குழுவின் தலைவர், 2018.06.01 முதல் 2018.09.13 வரை |
| திரு. ஆர்.எம்.ஜே. ரனசிங்ஹ (திறைசேரி பிரதிநிதி) | - | கணக்காய்வுக் குழுவின் தலைவர், 2018.12.20 முதல் |
| திருமதி ஜே.எம.சீ. மாலனி ஜயவர்தன (சபை உறுப்பினர்) | - | கணக்காய்வுக் குழு உறுப்பினர் |
| திருமதி பீ.ஏ.டீ.ஏ. அபேவர்தன | - | குழுவின் அவதானிப்பாளர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| திரு. ஆர். கருணாரத்ன | - | குழுவின் அவதானிப்பாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதி |
| செல்வி. ஈ.டீ.ஆர். பிரபானி | - | சபை செயலாளர்/ சட்ட உத்தியோகத்தர் - கணக்காய்வுக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார். பீஈடீ/55 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் |
| திரு. டபிள்யு.ஏ.கே. லக்ஸ்மன் | - | உள்ளகக் கணக்காய்வாளர், (கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுவினை கூட்டுபவர்) |

### குழுவின் குறிக்கோள்கள்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்வரும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கணக்காய்வுக் குழுவானது முடியுமானளவு முயற்சியினை மேற்கொண்டிருந்தது.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கெல்லையை நிர்ணயித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்தல்
- தேவையான நடவடிக்கைகளிற்கான பரிந்துரைகளுடன் தனது அவதானிப்புக்களை சபைக்குச் சமர்ப்பித்து ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிர்வகிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு உதவுதல்.
- குழுவின் பரிந்துரைகள் மீதான பின்தொடர் நடவடிக்கைகளை கண்காணித்தல்
- உள்ளகக/வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைக்காக முகாமைத்துவத்திற்கு பரிந்துரைகளை மேற்கொள்தல்.
- நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் பேரவை இணங்கியொழுகுவதனையும் பிரமாணத் தேவைப்பாடுகளிற்கு அமைவாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனையும் உறுதி செய்தல்.

- பேரவையின் அனைத்துத் தொழிற்பாடுகளிற்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மீளாய்வு செய்து அவ்வறான நடைமுறைகளின் சீரான செயற்பாட்டினை உறுதி செய்தல்.

- கிரய பயனுறுதிக்காகவும் சிக்கனமற்ற செலவினங்களை குறைப்பதற்காகவும் பாதீட்டு அறிக்கைகள் உள்ளடங்கலான காலாண்டு செயலாற்றல்களை மீளாய்வு செய்தல்.

**2018 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்**

- 2018 ஆம் ஆண்டிற்கான வரைபு வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு திருத்தங்களுடன் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- பூச்சியப் பெறுமதியுடைய அலுவலக மற்றும் விஞ்ஞான உபகரணங்களை மீளவிலைமதித்தல் மீதான அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டமை.

- உள்ளக மற்றும் அரசாங்க கணக்காய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னைய குழுக் கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கலை மீளாய்வுசெய்து முன்னேற்றுவதற்கு தேவையாகக் காணப்பட்ட மேலதிக பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை கணக்காய்வுக் குழு கலந்துரையாடி கீழே பட்டியலிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை பரிந்துரைத்திருந்தது.

- சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக 2017 இன் இறுதிக் கணக்குகளை சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்து அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- குழுவின் பரிந்துரைகள், நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2017 இன் கைதவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை கைதவிர்த்தல்.

- 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வினை நடாத்துவதற்காக குழுவொன்றை நியமித்தல்.

- 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பயன்பாட்டினை பேணுதலும் அரசாங்க கணக்காய்வு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளின் பிரகாரம் வாகன ஓட்டப் பதிவேடுகளை வாரத்திற்கு ஒருமுறை பரீட்சித்தல்.

- அமைச்சின் கணக்காய்வுக் குழுத் தீர்மானம் மற்றும் 2.׃.2016 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் படி கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் பேரவையின் புத்தகங்களிலிருந்து கடன்பட்டோர் மீதியினை அகற்றுதல்.

- பேரவையின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நிறுவனங்களின் களப்பரிசோதனையின் போது கதிர்வீச்சுப் பாதுகாப்பு மீது கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் தொடர்பில் திருத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்களிற்கு ஆலோசனை வழங்குதல்.

- நிதிப்பிரமாணங்கள் 110 மற்றும் 109 இன் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டைப் பேணுதல்.

- எரிபொருள் பட்டியல்கள் மற்றும் பதிவேட்டில் வாகன இலக்கத்தினைக் குறிப்பிடுதல்.
- களப்பரிசோதனைகளின் போது பேரவையின் ஊழியர்களிற்கு தங்குமிடம் தொடர்பில் செலுத்திய கொடுப்பனவுகளிற்கு அங்கீகாரத்தினைக் கோரி முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு கடிதங்களை அனுப்புவதற்கு ஆலோசனை வழங்குதல்.

- நல்லாளுகை வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 7.4.2 இன் பிரகாரம் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்றை நியமித்தல்.

- 2016, 2017 இன் பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் ஊக்குவிப்புக்களைச் செலுத்துதல்.

- இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்காக 01 சாரதி மற்றும் 02 முகாமைத்துவ உதவியாளர்களிற்கான புதிய பதவிகளை உருவாக்குதல்.

- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் படி ஒதுக்கீட்டை ஆகக்குறைந்தது ரூபா 300,000 ஆக அதிகரித்தல்.

- அனைத்து கொடுப்பனவு உறுதிச்சிட்டைகளிற்குமான செவ்வைபார்த்தல் பட்டியலொன்றை பராமரித்தல்.

- விடுமுறை விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விடுமுறைப் பதிவேடு ஆகியவற்றில் விடுமுறைத் திகதியினைக் குறிப்பிடுதல்.

- பொது முயற்சிகள் சுற்றறிக்கை 449 மற்றும் தாபனவிதிக் கோவை IX இன் பிரகாரம் வாகனப் பரிசோதனையினை மேற்கொள்கின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிற்கு ரூபா 250 செலுத்துதல்.

- சபையின் அங்கீகாரத்திற்காக 2018 இற்கான பாதீட்டைத் திருத்துதல்.

- புதிய உத்தியோகத்தர்களிற்கு கடமைப் பட்டியல்களை வழங்குதல்.

- சேவை உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கும் அலுவலக உபகரணங்களின் சேவையாளர்களைப் பதிவதற்கும் பதிவேடென்றைப் பேணுதல்.

- வூாகன ஓட்டப்பதிவேடுகளைப் பரீட்சித்த பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையினை அனுப்பிவைத்தல்.

- எம்எம் தரத்திற்குரிய பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியினைத் தோற்றுவித்தல்.

## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினைத் தாபித்தல்

அமைச்சரினால் 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய பேரவை தொழிற்பட்டு வருகின்றது.

### பேரவையின் அமைவிடம்

பேரவை அதனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கண்டி வீதி, புலுகஹ சந்தி, களனிய இல் அமைந்துள்ள வெடிப்புறாத பரிசோதனைக்கான தேசிய நிலையக் (என்சீஎன்டீரீ) கட்டிடத்தினை (மூன்றாம் மாடியிலுள்ள ஏறத்தாழ 6500 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய நிலப்பரப்பு) வாடகைக்குப் பெற்றுக்கொண்டது.

### வளங்கள்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரவையில் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட 16 விஞ்ஞான உத்தியோகத்தர்களும் ஒரு சட்டத்தரணி உள்ளடங்கலாக 21 நிர்வாகப் பதவியணியினரும் காணப்பட்டனர். அதிகாரச்சட்டத்தினால் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பேரவைக்கான இடப்பரப்பு, விஞ்ஞான மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் போதுமானதாக இல்லாதிருந்த போதிலும், பேரவையின் தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு போதியளவு அலுவலக உபகரணங்களை பேரவை கொண்டுள்ளது.

## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகள்

### சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள்

அவசியமான சட்டரீதியான அதிகாரங்களை பேரவைக்குப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு பிரமாணங்கள், விதிகள் மற்றும் கட்டளைகளை வரைந்து சேர்த்துக்கொள்ளல் அதிகாரச்சட்டத்தினை அமுல்படுத்தவதற்கான தேவையாக உள்ளது. 2018 ஆம் ஆண்டில் சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்புப் பிரமாணங்கள்

தொடர்புடைய சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் (ஐஏஈஏ) வெயிளீடுகளுடன் அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்களின் வரைபு மீளாய்வு செய்யப்பட்டதுடன் திருத்தப்பட வேண்டிய பரப்புக்கள் இணங்காணப்பட்டு தொடர்புடைய தகவல்களுடன் வரைபு நாளதுவரையாக்கப்பட்டது.

பிரமாணங்களை தயாரிப்பதற்கு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைத்துள்ள பின்வரும் பரப்புகளை வரைவுப் பிரமாணங்கள் உள்ளடக்கியிருந்தன.

(அ) ஏற்றுமதிகள், இறக்குமதிகள், மீள் ஏற்றுமதிகள், களஞ்சியப்படுத்தல், சுரங்கமறுத்தல், செயன்முறைப்படுத்தல், வடிவமைத்தல், உற்பத்திசெய்தல், நிர்மாணம், பொருத்துதல்கள், ஈட்டல்கள், விநியோகம், விற்பனை, குத்தகை, வாடகைக்கு விடுதல், பெறுதல், அமர்வு, இடஅமைவு, ஆரம்பித்தல், செயன்முறைப்படுத்தல், இடைநிறுத்துதல், பிரித்து வேறாக்குதல், கதிர்வீச்சு பொருட்களை அல்லது கதிர்வீச்சு மூலங்களை பயன்படுத்துதல் அல்லது அகற்றுதல் மற்றும் அவற்றை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வைத்திருத்தல், செயற்படுத்தல், அணுக்கசிவுப் பொருட்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தல் என்பனவற்றுக்கான பிரமாணம்.

(ஆ) கதிர்வீச்சற்ற பொருத்துக்களை பிரித்து வேறாக்குதல்.

(இ) மருத்துவ ஆபத்துக்கள் மற்றும் தொழில்சார் அயனாக்கல் கதிர்வீச்சு வெடிப்புக்கள் உள்ளடங்கலாக அயனாக்கல் கதிர்வீச்சின் பாதகமான தாக்கங்களிலிருந்து கதிரியக்க தொழிலாளர்களை பாதுகாத்தல்.

(ஈ) அயனாக்கல் கதிர்வீச்சின் பாதகமான தாக்கங்களிலிருந்து பொது மக்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல்.

(உ) நோயாளர்கள் பாதுகாப்பு உள்ளிட்ட அயனாக்கல் கதிர்வீச்சுடன் தொடர்புடைய மருத்துவ நடைமுறைகளிற்கான பிரமாணங்கள்.

(ஊ) சுற்றாடலுக்கு கழிவுகளை விடுவித்தல் அடங்கலாக கதிர்வீச்சு கழிவு முகாமைத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கும் பாதுகாப்புக்கும் தாக்கம் செலுத்தக்கூடிய எவையேனும் நடைமுறைகள் என்பவற்றிற்கான பிரமாணம்.

### கதிரியக்க மூலங்களின் பாதுகாப்புப் பிரமாணங்கள்

அனுமதியளிக்கப்படாது செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்ற கதிரியக்க மூலங்களிலிருந்து மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படக்கூடிய பாரிய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பளிப்பதற்காக பராமரிப்பு ஏற்பாடுகள் மிகவும் முக்கியத்துவமானதாகும். ஆகையால், கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பிரமாணங்களை உருவாக்கி, அமுல்படுத்துதல் அவசியத் தேவையாக உள்ளது. கதிரியக்க மூலங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட விடயங்கள் மீதான பாதுகாப்பு பிரமாணத்தை அதிகாரச்சட்டத்தின் 86(எ) பிரிவு வழங்குகின்றது. சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் தொடர்புடைய வெளியீடுகளுடன் ஒப்பீடுசெய்து வரைபு பிரமாணங்களை பேரவை மீளாய்வு செய்ததுடன் ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் உதவியுடன் பிரமாணங்களின் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டது. ஆர்வமுள்ள தரப்பினர்களுடனான கூட்டங்களின் போது இந்தப் பிரமாணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களது கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இறுதி வரைபு தயாரிக்கப்பட்டது.

### கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமைகளை அளவிடும் விதிகள்

தொழிலாளர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்களின் கதிர்வீச்சுப் பாதுகாப்பிற்கு அவசியமான சில விடயங்கள் தொடர்பில் விதிகளைத் தயாரிப்பதற்கான அதிகாரத்தை அதிகாரச்சட்டத்தின் 87 ஆவது பிரிவு பேரவைக்கு வழங்குகின்றது.

87(1)(ஈ) பிரிவின் கீழ் பேரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் மேற்படி விதிகள் வரையப்பட்டன. அயனாக்கல் கதிர்வீச்சினை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு தொழிலாளர் வகுப்பிற்கும் தேவையான ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவங்களை இந்த விதி உருவாக்குகின்றது.

கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமைகளிற்கான முதலாவது விதியின் வரைபு தயாரிக்கப்பட்டு 15 ஆர்வமுள்ள நிறுவனங்களின் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்வதற்காக அவர்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. 04 நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களும் அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமைகளிற்கான முதலாவது விதியின் வரைபினை இறுதியாக்குவதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களை மேலும் கலந்துரையாடும் பொருட்டு 2018 திசெம்பர் 24 ஆந் திகதி ஒரு சுற்றுவட்ட மேசைக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

### 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களிற்காக உயர் நீதிமன்றொன்றில் வழக்குத் தொடரும் பிரமாணங்கள்

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், உயர் நீதிமன்றொன்றில் வழக்காடப்பட வேண்டுமென்ற தேவைப்பாடுடைய சட்டத்தின் கீழான குற்றங்களை செவிமடுப்பதற்காக உயர் நீதிமன்றமொன்றை முன்மொழிதல் வேண்டும். பேரவையின் உதவியுடன் நீதி அமைச்சும் சட்ட வரையுனர் திணைக்களமும் இலங்கையில் உயர் நீதிமன்றமொன்றை முன்மொழிவதற்கான பிரமாணத்தை வரைந்து, அதிகாரச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள குற்றங்களை செவிமடுப்பதற்கான உயர் நீதிமன்றமாக கொழும்பு நீதித்துறை வலயத்திலுள்ள உயர் நீதிமன்றத்தை இதற்காக பரிந்துரைத்தது. பிரமாணமானது 2050/30 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மேற்படி பிரமாணம் 2018.03.20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

## சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் இணக்கப்பாடுகளை அமுல்படுத்துதல்

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 12(உ), 58(2) மற்றும் 60 ஆம் பிரிவுகளின் பிரகாரம், அணுப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான சர்வதேச கூட்டு உடன்படிக்கைகள், இணக்கங்கள் மற்றும் பிரகடனங்களில் கைச்சாத்திடுவதற்கான அதிகாரமும் பொறுப்பும் பேரவைக்கு உள்ளதுடன் அவ்வாறு ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச கூட்டு உடன்படிக்கைகள், இணக்கங்கள் மற்றும் பிரகடனங்களிலுள்ள இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பேரவை பொறுப்புடையது. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் வெற்றியளித்திருந்தன.

### இலங்கையின் பாதுகாப்பு உடன்படிக்கைக்கான மேலதிக சாசனம்

மேலதிக உடன்படிக்கையில் கைச்சாத்திடுதலானது இலங்கை ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ள அணு ஆயுதங்களை பயன்படுத்தாமை மீதான உடன்படிக்கையின் கீழுள்ள இலங்கையின் கடப்பாடாக காணப்படுகின்றமையால் மேலதிக சாசனத்தில் கைச்சாத்திடுவதற்கு அரசாங்கம் தீர்மானிக்குமாயின் ஒவ்வொரு ஆர்வமுள்ள தரப்பினரதும் கடப்பாடுகளை புரிந்துகொள்ளும் பொருட்டு தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் கல்ந்துரையாடுவதற்கென 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பேரவையினால் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பேரையின் உத்தியோகத்தர்களிற்கும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களிற்கும் இடையில் இதுகுறித்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பல்வேறு கலந்துரையாடல்களும் பின்தொடர் நடவடிக்கைகளும் இடம்பெற்றன. மேலதிக சாசனத்தை சேர்ப்பதற்கு உறுதுணையாக காணப்படுகின்ற சட்டதிட்டங்களை மதிப்பீடு செய்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு பேரவை தனது உதவியினை வழங்கியதுடன் இது தொடர்பில் இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்திலும் அணு ஆயுதங்களை பயன்படுத்தாமை மீதான சாசனத்திலும் பாதுகாப்பு உடன்படிக்கையிலும் காணப்படுகின்ற சட்டரீதியான ஏற்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

ஆர்வமுள்ள தரப்பினர்களுடனும் சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் கலந்துரையாடிய பின்னர், பாதுகாப்பு உடன்படிக்கைக்கு மேலதிக சாசனமொன்றை சேர்ப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் கூட்டாக இணைந்து அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இலங்கையில் உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்கான சட்டரீதியான தேவைப்பாடுகள் உருவாக்கப்பட்ட பின்னர், உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடும் என ஐஏஈஏ இற்கு அறிவிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கமைய, குறித்த தேவைப்பாடுகளிற்கு உட்பட்டு மேலதிக சாசனத்தில் கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவையின் தீர்மானம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஐஏஈஏ இற்கு அறிவிக்கப்பட்டது.

### அணு அல்லது கதிரியக்க அவசர நிலைமைகளில் உதவுதல் மீதான பிரகடனம் மற்றும் அணு விபத்து தொடர்பில் அறிவித்தல் பிரகடனம்.

மேற்படி பிரகடனங்களில் இலங்கையும் ஒரு தரப்பாக உள்ளதுடன் அதிகாரச்சட்டத்தின் 58(2) ஆம் பிரிவின் பிரகாரம் மேற்படி சாசனங்களிற்கான தொடர்புறும் நிலையமாக பேரவை தொழிற்படுகின்றது. அதற்கமைய, சர்வதேச எச்சரிக்கை மையமாகவும் தகுதிவாய்ந்த அதிகாரியாகவும் (உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்) தொழிற்படுவதற்கான சகல தொடர்புகொள்ளல் விபரங்களையும் வழங்கி பேரவையிலிருந்து பொறுப்புவாய்ந்த ஆட்களை இலங்கை பிரேரித்தது. தொடர்புகொள்ளல் நிலையம் என்ற வகையில் பேரவையானது ஐஏஈஏ இன் விபத்து மற்றும் அவசர நிலையத்தினால் (ஐஈசீ) நடாத்தப்பட்ட பல்வேறு பயிற்சி செயலமர்வுகளில் கலந்துகொண்டது.

## அதிகாரமளித்தல் (அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரங்கள்)

### அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

2015 இன் 1 ஆம் இலக்க அணுசக்தி (அனுமதிப்பத்திரம்) விதிகள் மற்றும் 2015 இன் 1 ஆம் இலக்க (தொழிலொன்றை நடாத்துவதற்கான விருப்பத்தை அறிவித்தல்) அணுசக்தி விதிகளின் தேவைப்பாடுகளை பூரணப்படுத்தியவர்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 2016 சனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்டது. தொழிலில் காணப்படுகின்ற ஆபத்தினை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 01, 02 மற்றும் 03 ஆண்டுகள் என குறிப்பிட்ட விதிகள் குறித்துரைக்கின்றன. பின்வரும் தொழில்களிற்கு புதிய அனுமதிப்பத்திரங்களும் ஏற்கனவே அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிற்கு புதுப்பித்தல்களும் வழங்கப்பட்டன.

- கதிர்வீச்சு சிகிச்சை (ஊடுகதிர் சிகிச்சை, தொண்டை சிகிச்சை, மற்றும் நேர்கோட்டு இசைவாக்கங்கள்)
- அணு மருத்துவம் (சிகிச்சை, நோய்க் கண்டுபிடிப்புக்கள்)
- மருத்துவ கதிர்வீச்சியல் (பொது, பற்சிகிச்சை மற்றும் சிகிச்சையளித்தல்கள்)
- கைத்தொழில் ஒளிப்பிரப்பி பொறிகள் (மருத்துவ உற்பத்திகள் மற்றும் உணவுக் கதிர்வீச்சகற்றல்)
- கெம்மா ஒளிப்பிரப்பி கூடங்கள் (ஆராய்ச்சி, இரத்த கதிர்வீச்சகற்றல்)
- கைத்தொழில் ஒளிப்பிரப்பி (கெம்மா மற்றும் எக்ஸ்-கதிர்கள்)
- நியூட்ரன் பிறப்பாக்கிகள், அணுவியல் பெட்டிகள், சிறப்பாக இணையும் மூலங்கள் மற்றும் இடி தாங்கிகள்
- பகுப்பாய்வு எக்ஸ்-கதிர் உபகரணங்கள், கதிர்வீச்சு மூலங்களைக் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்கள் மற்றும் பெட்டக எக்ஸ்-கதிர் பிரிவுகள்
- பொறியிடப்பட்ட மற்றும் பொறியிடப்படாத கதிரியக்க மூலங்கள்
- ஒளிப்பிறப்பி உபகரணங்களையும் கதிரியக்க பொருட்களையும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல்.
- கதிரியக்க பொருட்களின் போக்குவரத்து
- ஒளிப்பிரப்பி உபகரணங்கள் மற்றும் கதிரியக்க மூலங்களைக் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்களை திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- கதிரியக்க கழிவு முகாமைத்துவம் மற்றும் களஞ்சியப்படுத்தல்
- கதிரியக்க மூலங்களை அகற்றுதலும் அப்புறப்படுத்தலும்
- கதிரியக்க மூலங்கள் மற்றும் ஒளிப்பிறப்பி உபகரணங்களை விற்பனை செய்தல்
- மானிடத் தோற்ற எக்ஸ்-கதிர் முறைமை

### அனுமதிப்பத்திர புதுப்பித்தல் விண்ணப்பங்களை திருத்தியமைத்தல் மற்றும் புதிய விண்ணப்பங்களைத் தயாரித்தல்

பின்வரும் தொழில்களிற்கான அனுமதிப்பத்திர புதுப்பித்தல் விண்ணப்பங்கள் திருத்தியமைக்கப்பட்டு புதிய விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட்டதுடன் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்காக அனுமதிப்பத்திர உரித்தாளர்களிற்கும் புதிதாக அனுமதிப்பத்திரங்களிற்கு விண்ணப்பித்தோருக்கும் விநியோகிப்பட்டன.

| இல. | விண்ணப்பத்தின் பெயர் | உள்ளடக்கப்பட்ட மூலங்கள் | விண்ணப்பக் குறியீட்டு இல. | புதுப்பித்தல் காலம் |
|---|---|---|---|---|
| 01 | சில தொழில்களிலுள்ள அயனாக்கல் கதிர்வீச்சு பிரயோகத்திற்கான அனுமதிப்பத்திர விண்ணப்பம் | சில பிரயோகங்களிற்காக அல்லது மற்றும் சில நோக்கங்களிற்காக 370 ஜிகா பக்கியூரல் (10 கியுரீ) இற்கும் குறைந்த ஒட்டுமொத்த செயற்பாட்டுடன் கூடிய பொறியிடப்பட்ட மற்றும் பொறியிடப்படாத ஒளிப்பிறப்பி பொருட்களை பயன்படுத்துவதற்கு | படிவம் UC-02 (திருத்தம் 1) | 2 ஆண்டு கள் |
| 02 | சில தொழில்களிலுள்ள அயனாக்கல் கதிர்வீச்சு பிரயோகத்திற்கான அனுமதிப்பத்திர புதுப்பித்தல் விண்ணப்பம் | சில பிரயோகங்களிற்காக அல்லது மற்றும் சில நோக்கங்களிற்காக 370 ஜிகா பக்கியூரல் (10 கியுரீ) இற்கும் குறைந்த ஒட்டுமொத்த செயற்பாட்டுடன் கூடிய பொறியிடப்பட்ட மற்றும் பொறியிடப்படாத ஒளிப்பிறப்பி பொருட்களை பயன்படுத்துவதற்கு | படிவம் UC-02-R (திருத்தம் 1) | 2 ஆண்டு கள் |
| 03 | அயனாக்கல் கதிர்வீச்சில் ஈடுபட்டுள்ள தொழிலிற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை மாற்றியமைப்பதற்கான விண்ணப்பம். | அனைத்து வசதிகளும் மூலங்களும் | படிவம் Mod-01 (திருத்தம் 1) | - |
| 04 | கைத்தொழில், ஆராய்ச்சி மற்றும் கற்றல்களில் அயனாக் கல் கதிர்வீச்சினை பிரயோகிப் பதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | பார்டிகல் எக்சலரேடர்ஸ்/ நியூட்ரன் பிறப்பாக்கிகள்/ நியூக்லொனிக் கேஜஸ்/வெல் லொக்கிங் மூலங்கள்/ வெளிச்சமூட்டல் பிடிப்பான்கள் | படிவம் IN-01-A-R | 2 ஆண்டு கள் |
| 05 | கைத்தொழில், ஆராய்ச்சி மற்றும் கற்றல்களில் அயனாக் கல் கதிர்வீச்சினை பிரயோகிப்ப தற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | 37 ஜிகா பெகுஎரல் (1 குரீ) இற்கு மேற்பட்ட மொத்த செயற்பாட்டுடன் கூடிய பொறியிட்ட மற்றும் பொறியிடப் படாத மூலங்கள் | படிவம் IN-01-B-R | 2 ஆண்டு கள் |
| 06 | இன்விட்ரோ அல்லது இன்வைவோ நோய்க்கண்டு பிடிப்புக்களிற்காக பொறியிடப் படாத மூலங்களை பயன்படுத் தும் அணு மருத்துவ வசதிக ளிற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | இன்விட்ரோ அல்லது இன்வைவோ பொறியிடப் படாத மூலங்கள் | படிவம் NM-02-R | 2 ஆண்டு கள் |
| 07 | அயனாக்கல் கதிர்வீச்சினைப் பயன்படுத்தி தொற்றுநீக்கி, உணவுப் பாதுகாப்பு மற்றும் குருதி கதிர்நீக்கல் என்பவற்றிற் கான அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | கெம்மா இரேடியேசன் செம்பர்/ இலக்ட்ரோன் பீம் எக்சலரேடர்ஸ்/ X-கதிர் இயந்திரம் | படிவம் SI-02-R | 2 ஆண்டு கள் |
| 08 | அயனாக்கல் கதிர்வீச்சினைப் பயன்படுத்தி தொற்றுநீக்கி, உணவுப் பாதுகாப்பு மற்றும் குருதி கதிர்நீக்கல் என்பவற்றிற் கான அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | உலர் களஞ்சியப்படுத்தல் அல்லது பூல் வகை இரேடியேசன் வசதி | படிவம் SI-01-R | 1 ஆண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | வான்வழியாக போக்குவரத்துச் செய்யப்பட்ட கதிரியக்க மூலங்களின் களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாள்கைக்காக பயன்படுத்திய வசதிகளிற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | அனைத்து மூலங்களும் | படிவம் SH-01-R | 1 ஆண்டு |
| 10 | அயனாக்கல் கதிர்வீச்சை பயன்படுத்தும் கைத்தொழில் கதிர்வீச்சலைக்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | கெம்மா/ நியூட்ரன/பீடா/ரேடியகொிரபி மூலங்கள் மற்றும் x-கதிர் இயந்திரங்கள் | படிவம் IR-01-R | 1 ஆண்டு |
| 11 | மருத்துவ கதிர்வீச்சலை வசதிகளிற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | பொதுவான ரேடியோகிரபி x-கதிர் இயந்திரங்கள்/ இன்டவன்சனல் ரேடியோலொஜிகல் x-கதிர் இயந்திரங்கள் / மற்றும் அன்கியோகிரபி x-கதிர் இயந்திரங்கள் /சீரீ ஸ்கேனா/மெமோகிரபி x-கதிர் இயந்திரங்கள் | படிவம் MR-01-R | 2 ஆண்டு கள் |
| 12 | அயனாக்கல் கதிர்வீச்சினைப் பயன்படுத்தும் மருத்துவ கதிர்வீச்சலைக்கான அனுமதிப் பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற் கான விண்ணப்பம் | பற்சிகிச்சை எக்ஸ்-கதிர் இயந்திரம் / எழும்பு அடர்த்தி ஸ்கேனர் | படிவம் MR-02-A | 3 ஆண்டு கள் |
| 13 | அயனாக்கல் கதிர்வீச்சினைப் பயன்படுத்தும் மருத்துவ கதிர்வீச்சலைக்கான அனுமதிப் பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற் கான விண்ணப்பம் | மிருகவைத்திய எக்ஸ்-கதிர் இயந்திரம் | படிவம் MR-02-B | 3 ஆண்டு கள் |
| 14 | கைத்தொழில், ஆராய்ச்சி மற்றும் கற்றல்களில் அயனாக் கல் கதிர்வீச்சினை பிரயோகிப்ப தற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | 37 ஜிகா பெகுஎரல் (1 குரீ) இற்கு குறைந்த மொத்த செயற்பாட்டுடன் கூடிய பொறியிட்ட மற்றும் பொறியிடப்படாத மூலங்கள் | படிவம் IN-02-B-R | 3 ஆண்டு கள் |
| 15 | அயனாக்கல் கதிர்வீச்சை பயன்படுத்துகின்ற ரேடியோதெரபி வசதிகளிற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | ரெலி-கெம்மா வசதி /கெம்மா கத்தி வசதி /பிரசிதெரபி வசதி | படிவம் RT-01-R | 1 ஆண்டு |
| 16 | தெரபிக்காக பொறியிடப்படாத மூலங்களை பயன்படுத்தும் அணு மருத்துவ வசதிகளிற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | தெரபிக்கான பொறியிடப்படாத மூலங்கள் | படிவம் NM-01-R | 1 ஆண்டு |
| 17 | கைத்தொழில், ஆராய்ச்சி மற்றும் கற்றல்களில் அயனாக் கல் கதிர்வீச்சினை பிரயோகிப்ப தற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | பகுப்பாய்வு எக்ஸ்-கதிர் உபகரணங்கள்/கதிரியக்க மூலங்களை உள்ளடக்கிய பகுப்பாய்வு உபகரணங்கள்/பெட்டக எக்ஸ் கதிர் பிரிவு | படிவம் IN-02-A-R | 3 ஆண்டு கள் |

2018 செப்தெம்பர் 30 ஆந் திகதியான இறுதித் தினத்திற்கு முன்னர் அனுமதிப்பத்திரங்களின் புதுப்பித்தலுக்காக பேரவைக்குக் கிடைத்திருந்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணத்தை செலுத்திய பின்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இத் திகதிக்குப் பின்னர் கிடைத்திருந்த விண்ணப்பங்களிற்கு அனுமதிப்பத்திரக் கட்டணமும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் மீதான தாமதக் கட்டணங்களும் செலுத்தப்பட்ட பின்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

2018 இற்கான அனுமதிப்பத்திர புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களின் மீளாய்வுச் செயன்முறையின் போது, பேரவையின் கதிர்வீச்சுப் பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் வசதியின் இணங்கியொழுகுதலை மதிப்பிடுவதற்காக முன்னைய பரிசோதனைகளின் கண்டுபிடிப்புக்களை பேரவை கருத்திற்கொண்டிருந்தது. அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் அனைத்து வசதிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மீளாய்வுச் செயன்முறையுடன் இணைந்த வகையில், ஒவ்வொரு அனுமதிப்பத்திர மட்டத்திற்கும் உரித்தான விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டணம் மற்றும் தேவைப்படுமிடத்து மிகை அறவீடுகளுடன் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை சேகரிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

## அனுமதிப்பத்திரங்களிற்கான நவீனப்படுத்தல்கள்

தொழிலொன்றை தொடர்வதற்கு அதிகாரச்சட்டத்தின் 27(1) ஆம் பிரிவில் இனங்காணப்பட்டுள்ள நிலமைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை இடம்பெறுதல் மீது அனுமதிப்பத்தரங்களிற்கான நவீனப்படுத்தல்கள் தேவைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய, நவீனப்படுத்தல்கள் தேவைப்பட்ட தொழில்களிற்கு நவீனப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

## இடைக்கால அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

அதிகாரச்சட்டத்தின் 28(2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி இறுதித் திகதிக்கு பின்னர் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்த விண்ணப்பதாரிகளிற்கு ஏற்கனவேயுள்ள அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாவதற்கு முன்னர் இந்த விண்ணப்பங்களை மீளாய்வு செய்வதற்கு காலம் போதாமையால் புதுப்பித்தலை செய்வதற்கு உட்பட்டு இடைக்கால அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

## மீளாய்வுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

| அனுமதிப்பத்திர வகை | வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை |
|---|---|
| தற்போதுள்ள தொழில்களிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் (புதியன மற்றும் புதுப்பித்தல்) | 346 |
| வழங்கப்பட்ட நவீனப்படுத்தல்கள் | 27 |
| வழங்கப்பட்ட இடைக்கால அனுமதிப்பத்திரங்கள் | 19 |
| மொத்தம் | 392 |

## கதிர்வீச்சற்ற அறைகளிற்கான அங்கீகாரம்

அறைகளிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு விடயங்களை கவனமாக மதிப்பிட்ட பின்னர் புதிய வசதிகளின் கதிர்வீச்சற்ற அறைத் திட்டங்களிற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. 2018 இல் பின்வரும் தொழில்களிலுள்ள 157 கதிர்வீச்சற்ற அறைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

| தொழில்/மூலம் | அங்கீகரித்த அறைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மருத்துவ வசதிகள் (X- கதிர்) | 140 |
| அணு மருத்துவ வசதிகள் | 03 |
| கைத்தொழில் வசதிகள் (X – கதிர்) | 08 |
| கைத்தொழில் வசதிகள் (கெம்மா) | 05 |
| மருத்துவ நேர்கோட்டு விசைப்பலகை | 01 |
| மொத்தம் | 157 |

### உள்ளூர் சந்தைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுகளை விடுவிப்பதற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள்

பரிசோதிக்கப்பட்ட பால் உணவு மாதிரிகளிற்காக இலங்கை அணுசக்தி சபையினால் வழங்கப்பட்ட பரிசோதிக்கப்பட்ட பால் உணவு மாதிரிகளின் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் சந்தைக்காக இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுகளை விடுவிப்பதற்காக உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 984 ஆகும்.

### பதிவேடுகளின் பேணுகை

கதிரியக்க மூலங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் தரவடிப்படை பதிவேடொன்று பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டது. அனுமதிப்பத்திர தாரர்களின் பெயர் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்கள் பேரவையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டு பொதுமக்கள் தகவல்களிற்காக நாளதுவரையாக்கப்பட்டது.

பேரவையின் கோரிக்கையின் பேரில் "ஒழுங்கமைத்தல் அதிகாரத் தகவல் முறைமை (ஆர்ஏஐஎஸ்)" என்ற பெயரில் ஒழுங்கமைத்தல் முகாமைத்துவத்திற்காக புதிய மென்பொதியொன்றையும் வன்பொதியொன்றையும் ஐஏஈஏ அனுப்பிவைத்திருந்தது. ஆர்ஏஐஎஸ் இனைப் பொருத்துவதற்கும் அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் பேரவையின் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கும் ஐஏஈஏ தனது நிபுணத்துவ உதவியினை வழங்கியது. ஆர்ஏஐஎஸ் இனைப் பொருத்துதல் மற்றும் அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் பேரவையின் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிநெறி 2018 ஏப்ரல் 02 முதல் 06 வரை இடம்பெற்றது. தற்போது களப்பரிசோதனைத் தரவுகளும் அனுமதிப்பத்திரம் வழங்குதலும் பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் இந்த ஆஏஐஎஸ் இல் பதியப்படுகின்றன.

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு

பிரமாணங்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த பின்னர் கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிரகற்றல் உபகரணங்களை ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் பேரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியது. போக்குவரத்தின் போது மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்ட பின்னர் சுங்கத்திலிருந்து கதிரியக்க கொள்கலன்களை விடுவிப்பதற்கான அங்கீகாரங்களும் வழங்கப்பட்டன.

2018 இல் மூலங்களை ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் எண்ணிக்கை 810 ஆகும்.

சில வேளைகளில் ஏற்றுமதி அனுமதிப் படிவங்களில் தரப்பட்டுள்ள தகவல்களை மெய்மையாய்வு செய்வதற்காக களப்பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுவதுடன் சர்வதேச போக்குவரத்துப் பிரமாணங்களை பூர்த்திசெய்யும் விதத்தில் போக்குவரத்துப் பொதி வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதனையும் பரிசோதிக்க வேண்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஏற்றுமதியுடன் தொடர்புடைய 11 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கதிரியக்க மூலங்களின் 1 அல்லது 2 ஆவது வகையினை இறக்குமதி செய்து கழிவுக் கதிரியக்க மூலங்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கான அங்கீகாரங்களை வழங்குதல், ஐஏஈஏ இன் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மீதான விதிகளிற்கும் ஐஏஈஏ இன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வழிகாட்டல் ஆவணத்திற்கும் அமைவாக மேற்கொள்ளப்பட்டது.



**மீள் ஏற்றுமதி அங்கீகாரத்திற்காக கதிரியக்க பொதிகளைப் பரிசோதித்தல்**

## பாதுகாப்புக் களப்பரிசோதனைகள் மற்றும் அமுலாக்கம்

அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அதிகாரமுடைய பரிசோதகர்களால் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அறிவித்தல் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்படாது களப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தினை பேரவை கொண்டுள்ளது. களப்பரிசோதனைகளின் போது, வசதிகளிற்காகவும் மூலங்களிற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் ஒழுங்குகளை பரிசோதகர்கள் பரீட்சிப்பதுடன் அனுமதிப்பத்திர விண்ணப்பங்களில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது இதன்போது பரிசோதிக்கப்படுகின்றது. தொழிலில் காணப்படுகின்ற இடரின் அடிப்படையில் இடைக்கிடை அனுமதிப்பத்திர வசதிகள் பரிசோதிக்கப்படுவதுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வசதிகளின் பரிசோதனைக் காலமானது வசதிகளின் வகைக்கமைய அனுமதிப்பத்திரக் காலத்தினை (ஓராண்டு, இரண்டாண்டு மற்றும் மூன்றாண்டு) ஒதத்தாகக் காணப்படும். இருப்பினும், பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக களப்பரிசோதனையொன்று தேவைப்படுகையில் மேலதிகக் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கதிர்வீச்சு பாதுகாப்பு களப்பரிசோதனையின் பின்னரே புதிய வசதிகளிற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளின் தகவல்களை உள்ளடக்கிய தரவடிப்படை பேணப்படுவதுடன் அது காலரீதியாக நாளதுவரையாக்கப்படுகின்றது.

### கைத்தொழில் பிரயோகங்களில் களப்பரிசோதனைகள்

களப்பரிசோதனைக் காலம், தொழில்கள்/மூலங்கள், கைத்தொழில் பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனை எண்ணிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

| காலம் | தொழில் / மூலம் | பரிசோதனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஓராண்டு | - கைத்தொழில் பிரகாசிப்பானகள் (தடாக வகை பிரகாசிப்பான்)<br>- கைத்தொழில் ரேடியோகிரபி வசதிகள் | 08 |
| ஈராண்டு | - சுய கவச கெம்மா பிரகாசிப்பான் / எக்ஸ்-கதிர் இயந்திரம்<br>- நியுக்லோனிக் பெட்டிகள் மற்றும் வெல் லொஜிங் மூலங்கள்<br>- துணிக்கை விசைகள்<br>- ஒளிப்பிறப்பி கைதுசெய்தல் கருவிகள்<br>- மொத்தமாக 37 இற்கு மேற்பட்ட ஜிகா பெக்யூரல் (1 கூரி) செயற்பாடுடைய பொறியிடப்பட்ட மற்றும் பொறியடப்படாத மூலங்கள் | 12 |
| மூவாண்டு | - கதிரியக்க மூலங்களைக் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்கள்<br>- பகுப்பாய்வு எக்ஸ்-கதிர் உபகரணங்கள்<br>- பெட்டக எக்ஸ்-கதிர் அலகுகள்<br>- மொத்தமாக 37 இற்கு குறைவான ஜிகா பெக்யூரல் (1 கூரி) செயற்பாடுடைய பொறியிடப்பட்ட மற்றும் பொறியடப்படாத மூலங்கள | 15 |

2018 இல் கைத்தொழில் பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்தக் களப்பரிசோதனைகள் 35 ஆகும்.



கைத்தொழில் ரேடியோகிரபி வசதியொன்றில் களப்பரிசோதனை



கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனொன்றில் கதிர்வீச்சுக் கசிவைப் பரிசோதித்தல்

## மருத்துவப் பிரயோகங்களில் களப்பரிசோதனை

களப்பரிசோதனைக் காலம், தொழில்கள்/மூலங்கள், மருத்துவப் பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனை எண்ணிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

| காலம் | தொழில் / மூலம் | பரிசோதனை எண்ணிக்கை |
|---|---|---|
| ஓராண்டு | - தொலை கெம்மா வசதி<br>- தொண்டை தெரபி வசதி<br>- அணு மருத்துவ வசதிகள் (பொறியிடப்படாத மூலங்களை பயன்படுத்திய தெரபி) | 07 |
| ஈராண்டு | - சீரீ ஸ்கேனர்<br>- மெமோகிரபி இயந்திரம்<br>- பொது ரேடியோகிரபி இயந்திரம்<br>- இன்டர்வென்சனல் கதிரியல் எக்ஸ்-ரே கூறு/எங்கியோகிரபி கூறு<br>- நேர்கோட்டு விசை வசதி<br>- டோமோதெரபி வசதி<br>- எக்ஸ்-ரே வசதி<br>- தெரபிக்கான சீரீ சிமுலேடர்<br>- அணு மருத்துவ வசதி நோய்க்கண்டுபிடிப்பு மற்றும் கதிரோட்ட எஸ்ஸீ (ஆர்ஐஏ) | 160 |
| மூவாண்டு | - பற்சிகிச்சை எக்ஸ்-கதிர் இயந்திரம்<br>- மிருகவைத்திய எக்ஸ்-கதிர் இயந்திரம்<br>- எலும்பு அடர்த்தி ஸ்கேனர் | 58 |

2018 இல் மருத்துவ பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்தக் களப்பரிசோதனைகள் 225 ஆகும்.



மெமோகிரபி இயந்திரமொன்றைப் பரிசோதித்தல்



சத்திரசிகிச்சைக் கூடத்திலுள்ள சீ-ஆர்ம் இயந்திரமொன்றைப் பரிசோதித்தல்



புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்திய லீனியர் எக்சிலிரேடர் ஒன்றைப் பரிசோதித்தல்

## அணு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு

கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பும் பராமரிப்பும் மீதான சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் (ஐஏஈஏ) ஒழுங்குவிதிகளையும் கதிரியக்க மூலங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வழிகாட்டல்களையும் முழுமையாக கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவதற்கு ஐஏஈஏ இற்கு இலங்கை அரசியல் ரீதியான கடப்பாட்டினை வழங்கியுள்ளது.

"கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பும் பராமரிப்பும் மீதான ஒழுங்குவிதிகள்" கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை நோக்காகக் கொண்ட சட்டரீதியற்ற சர்வதேச ஆவணமொன்றாக காணப்படுவதுடன் குறிப்பாக ஐஏஈஏ இன் 1 மற்றும் 2 வகை கதிர்வீச்சு மூலங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக அங்கீகாரங்களை வழங்குகையில் பின்பற்றவேண்டிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழிகாட்டல்களும் சட்டரீதியற்ற ஆவணமொன்றாகவே காணப்படுகின்றது.

ஒழுங்குவிதிகளிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக, பேரவை பின்வரும் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

- உயர் கதிரியக்க செயற்பாடுடைய மூலங்களை பயன்படுத்துகின்ற இடங்களிற்காக பௌதீக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- பராமரிப்பற்ற மூலங்களை வைத்திருப்பதற்கும் தொடர்ந்து பயன்படுத்த முடியாத மற்றும் பயன்படுத்தி முடித்த கதிரியக்க மூலங்களை சேகரிப்பதற்கும் மூலங்களை தேடும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அணுப் பாதுகாப்பு நிகழ்வுகளின் போது அவற்றை எதிர்கொள்வதற்குப் விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சியளித்தல்.
- அனுமதிப்பத்திரங்களை வழங்கவதற்கென ஐஏஈஏ வகை - 1 மூலங்களை பயன்படுத்தும் வசதிகளிற்காக ஆகக்குறைந்த கதிரியக்க பாதுகாப்புத் தேவைப்பாடுகளை அறிமுகம் செய்தல்.
- ஐஏஈஏ இன் 1 மற்றும் 2 வகை கதிர்வீச்சு மூலங்களை அங்கீகரிக்கையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆவணத் தேவைப்பாடுகளை அமுல்படுத்ததல்.

### பௌதீக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்

வசதிகளிலும் உயர் கதிரியக்க மூலங்களை போக்குவரத்துச் செய்கையிலும் அணுப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான நிபுணத்துவமும் நிதியும் இலங்கையிடம் இல்லாமையால், உலகலாவிய அச்சுறுத்தல் குறைப்பு ஆரம்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் என அழைக்கப்படுகின்ற சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திடமிருந்தும் சக்திக்கான உலகலாவிய பொருள் பாதுகாப்பு (ஜீஎம்எஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் ஐக்கிய அமெரிக்க திணைக்களத்திடமிருந்தும் அணுப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான சர்வதேச தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### ஒளிக்கதிர் வசதிகளிற்கு பௌதீக பாதுகாப்பை வழங்குதல்

ஐக்கிய அமெரிக்காவின் ஜீஎம்எஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் பேரவை உயர் கதிர்வீச்சு செயற்பாடுடைய மூலங்களை பயன்படுத்துகின்ற பின்வரும் வசதிகளிற்கு பௌதீக பாதுகாப்பை வழங்கியது.

| வசதியின் பெயர் | வசதியின் வகை | பாதுகாப்புடைய அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| அபேக்ஷா வைத்தியசாலை, மகரகம | கதிர்வீச்சு தெரபி பொருத்திகள் | 04 |
| புற்றுநோய் பிரிவு, போதனா வைத்தியசாலை, கண்டி | கதிர்வீச்சு தெரபி பொருத்திகள் | 02 |
| புற்றுநோய் பிரிவு, போதனா வைத்தியசாலை, கராபிடிய | கதிர்வீச்சு தெரபி பொருத்திகள் | 01 |
| புற்றுநோய் பிரிவு, பொது வைத்தியசாலை, அநுராதபுரம் | கதிர்வீச்சு தெரபி பொருத்திகள் | 01 |
| புற்றுநோய் பிரிவு, மாகாண பொது வைத்தியசாலை, பதுளை | கதிர்வீச்சு தெரபி பொருத்திகள் | 01 |

| | | |
|---|---|---|
| புற்றுநோய் பிரிவு, ஆதார வைத்தியசாலை, தெள்ளிப்பலை, யாழ்ப்பாணம் | கதிர்வீச்சு தெரபி பொருத்திகள் | 01 |
| இலங்கை கெம்மா நிலையம், பியகம | தடாக முறை ஒளிப்பிறப்பி | 01 |
| அன்சல் லங்கா (தனியார்) லிமிடட், பியகம | தடாக முறை ஒளிப்பிறப்பி | 01 |
| மனித மென்தோல் (திசு) வங்கி, கொழும்பு 7 | தன்னிச்சை – கவச ஒளிப்பிறப்பி | 01 |
| விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், பேராதெனிய | தன்னிச்சை – கவச ஒளிப்பிறப்பி | 01 |
| ஆசிரி சத்திரசிகிச்சை வைத்தியசாலை, கொழும்பு 05 | குருதி ஒளிப்பிறப்பி | 01 |
| ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ், கட்டுநாயக்க | களஞ்சியப்படுத்தல் அறை | 01 |

புதிய வசதிகளை மதிப்பிடுதல், அணுப் பாதுகாப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் தற்போது காணப்படுகின்ற வசதிகளில் தேவைப்பாடுகள் அமுல்படுத்தப்படுவதனை மெய்மையாய்வு செய்தல் என்பவற்றிற்காக ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்கள நிபுணர்களின் பங்குபற்றலுடன் பின்வரும் களப்பரிசோதனைகள் (உறுதிப்படுத்தல் பயணங்கள்) மேற்கொள்ளப்பட்டன.

| வசதியின் பெயர் | திகதி | நோக்கம் |
|---|---|---|
| பயன்படுத்திய மூலங்கள் களஞ்சிய வசதி, இலங்கை அணுசக்தி சபை | 25.09.2018 | அணுப் பாதுகாப்பை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை அணுசக்தி சபையில் புதிதாகத் தாபிக்கப்பட்ட பயன்படுத்திய மூலங்கள் களஞ்சிய வசதியினை மதிப்பிடுதல். |
| போதனா வைத்தியசாலை, கராபிடிய, காலி | 26.09.2018 | தற்போது காணப்படுகின்ற வசதிகளில் தேவைப்பாடுகள் அமுல்படுத்தப்படுவதனை மெய்மையாய்வு செய்தல் |
| அன்சல் லங்கா (தனியார்) லிமிடட், பியகம | 05.03.2018 | தற்போது காணப்படுகின்ற வசதிகளில் தேவைப்பாடுகள் அமுல்படுத்தப்படுவதனை மெய்மையாய்வு செய்தல் |
| இலங்கை கெம்மா நிலையம், பியகம | 05.05.2018 | தற்போது காணப்படுகின்ற வசதிகளில் தேவைப்பாடுகள் அமுல்படுத்தப்படுவதனை மெய்மையாய்வு செய்தல் |
| விசேட அதிரடிப்படை பயிற்சிக் கல்லூரி, கடுகுருந்த | 05.03.2018 | உயர் செயற்பாடுடைய கதிர்வீச்சு வசதிகளில் இடம்பெறுவதற்குச் சாத்தியமான எந்தவொரு பாதுகாப்பு நிகழ்வையும் கண்காணிப்பதற்கான மத்திய கண்காணித்தல் நிலையத்தை தாபிப்பதற்கான இடத்தினை ஆரம்ப கட்டமாக மதிப்பிடுதல். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பௌதீக பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. |

**ஐக்கிய அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் ஜீஎஸ்எம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கான பயிற்சிகள்**

ஐக்கிய அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் ஜீஎஸ்எம் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து பின்வரும் பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டன. இதற்கான நிதி ஐக்கிய அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் ஜீஎஸ்எம் நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டது.

| பயற்சி/ செயலமர்வின் பெயா | காலம் | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| வேலைத்தள பாதுகாப்புத் திட்ட அபிவிருத்திச் செயலமர்வு | 16-19 யூலை 2018 | பிஷர்மன் பாய் ஹோட்டேல், வெலிகம. | 12 |
| வேலைத்தள பாதுகாப்புத் திட்ட தயாரித்தல் செயலமர்வு | 24-27 செப்தெம்பர் 2018 | பிஷர்மன் பாய் ஹோட்டேல், வெலிகம. | 30 |
| ஜீஎஸ்எம் நிகழ்ச்சித்திட்டத்தின் 6 ஆவது வலய மீளாய்வுக் கூட்டம் | 06-09 மார்ச் 2018 | கின்ஸ்பரி ஹோட்டேல், கொழும்பு | 80 |



ஆர்வமுள்ள தரப்பினர்களிற்காக வேலைத்தள பாதுகாப்புத் திட்ட அபிவிருத்திச் செயலமர்வை நடாத்துதல்

**பாதுகாப்பிற்கான ஒழுங்குபடுத்தல் முறைமையினை பலப்படுத்தல்**

கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்களை வரைவதற்கான நடவடிக்கைகளை மேரவை மேற்கொண்டிருந்ததுடன் இந்த பிரமாணங்களின் முதலாவது வரைவு ஐக்கிய அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் உதவியுடன் பூரணப்படுத்தப்பட்டது. எஸ்ரீஎவ் பயிற்சிக் கல்லூாயில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் பாடத்திட்டத்தில் அணுப் பாதுகாப்பினை உள்ளடக்குவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஐஏஈஏ இன் வகை – 1 கதிர்வீச்சு வசதிகளிற்காக வழங்கப்பட்டுள்ள சர்வதேச நியமங்களின் தேவைப்பாடுகளுடன் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு முறைமைகள் மற்றும் தயாரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் பொருந்துகின்றனவா என்பதனை களப்பரிசோதனையின் போது பரீட்சிப்பதற்காக செவ்வை பார்த்தல் பட்டியல் தயாரிக்கப்பட்டது. மேற்படி செவ்வை பாத்தல் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் போதுமான தன்மையினை மெய்மையாய்வு செய்து அதனை முன்னேற்றுவதற்கான பரிந்துரைகளை செய்வதற்காக பாதுகாப்பு பரிசேதனைகளை மேற்கொள்வதற்கு பேரவையின் கதிர்வீச்சு பாதுகாப்பு பரிசோதகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் உதவியுடன் “தேசிய கதிரியக்க எதிர்கொள்ளல் கோவையினை” (NRTRC) பேரவை வரைந்ததுடன் வரைவினை மீளாய்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தக் கோவையானது கதிர்வீச்சு பாதுகாப்பு அனர்த்த நிலைமையின் போது உரியநேரத்தில் வினைத்திறனான ஒருங்கிணைப்பு வசதியினை வழங்கும். ஆர்வமுள்ள தரப்புப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களிற்கு அமைய இந்தக் கோவை திருத்தியமைக்கப்பட்டு இறுதி வரைவு பேரவையின் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் அறிவுரைக்கமைய இறுதிக் கருத்துரையினைப் பெற்றுக்கொள்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு இந்த இறுதி வரைவினை அனுப்பிவைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. பல்வேறு ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து கருத்துரைகள் கிடைத்திருந்ததுடன் இறுதி ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது பௌதீக பாதுகாப்பு முறைமைகள் பொருத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் வேலைத்தள பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் சர்வதேச பொருட் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் பேரவையின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ள தரப்பினர்களிற்காக இரண்டு செயலமர்வுகளை பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

## கழிவு முகாமைத்துவம் மற்றும் கதிரியக்க மூலங்களின் போக்குவரத்து

### கழிவு முகாமைத்துவம்

**ஐக்கிய அமெரிக்காவில் (யூஎஸ்ஏ) உற்பத்திசெய்த பயன்படுத்திய கதிர்வீச்சு மூலங்களை மீள ஏற்றுமதி செய்தல்.**

ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்திசெய்யப்பட்ட 53 பயன்படுத்திய மூலங்களையும் (27 of Sr-90, 03 of Am/Be-241 & 23 of Cs-137) 07 கதிர்வீச்சு மூலங்களைக் கொண்ட மண் ஈரலிப்பு அடர்த்திப் பொருட்களையும் 2018 ஒக்தோபரில் ஐக்கிய அமெரிக்காவின் லொஸ் எலேமொஸ் ஆய்வுகூடத்திற்கு மீள ஏற்றுமதி செய்வதற்கு பேரவைக்கு முடிந்திருந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் சர்வதேச பொருட் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தினால் இந்த வேலை கூட்டிணைப்புச் செய்யப்பட்டதுடன் இந்த மூலங்களிற்குரிய அனைத்து சர்வதேச போக்குவரத்திற்கான செலவினம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் கைதவிர்த்தல் கிரயங்கள் என்பன இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. மூலங்களை போக்குவரத்துச் செய்வதற்கான கொள்கலன்கள் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஒப்பந்த காரரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் ஐஏஈஏ இன் கதிரியக்கப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கான பாதுகாப்பு விதிகளுடன் இணங்கும் விதத்தில் சர்வதேச போக்குவரத்திற்கான கொள்கலன்களைத் தயாரித்தல் பேரவையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

பேரவையின் வேண்டுகோளின் பேரில் ஐஏஈஏ இன் அணு எரிசக்தி திணைக்கள கழிவுத் தொழில்நுட்ப பிரிவின் மூல முகாமைத்துவ இலாகாவைச் சேர்ந்த நிபுணரான திரு. ஜுவான் காரியோஸ் பெனிரஸ் நவாரோ என்பவர் இலங்கை அணுசக்திச் சபையின் பயன்படுத்திய மூலக் களஞ்சிய வசதியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மூலங்களை இனங்கண்டு தரம்பிரிப்பதற்கு பேரவைக்கு உதவியிருந்தார். இந்த வேலைகள் 2018 சனவரி 09 – 11 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. அவரது வருகைக் காலத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கதிரியக்க மூலங்களை உள்ளடக்கிய 05 மண் ஈரலிப்பு அடர்த்தி பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் பயன்படுத்திய மூலங்கள் தரம்பிரிக்கப்பட்டு பாதுகாப்பாகவும் பராமரித்தலுடனும் அணுசக்திச் சபையின் பயன்படுத்திய மூலக் களஞ்சிய வசதியில் களஞ்சியப்படுத்தப்பட்டன.



ஐக்கிய அமெரிக்காவிற்கு போக்குவரத்துச் செய்வதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள ஈரலிப்பு அடர்த்திப் பொருட்கள்



சர்வதேச கதிரியக்கப் பொருள் போக்குவரத்துப் பிரமாணங்களுடன் இணங்கிய கதிரியக்கப் பொதிகளை சுட்டுத்துண்டிடுதல்.



சர்வதேச போக்குவரத்திற்காக கதிரியக்க மூலங்களை தயாரித்தல்

### பயன்படுத்திய மூலங்கள் களஞ்சிய வசதியினை இலங்கை அணுசக்திச் சபைக்கு கையளித்தல்

புதிய களனிப் பாலத்தினை நிர்மாணிப்பதற்கு வசதியாக பேரவைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற மத்திய கழிவுக் களஞ்சியப்படுத்தல் வசதி உடைக்கப்பட உள்ளதால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இலங்கை அணுசக்தி சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற பயன்படுத்திய மூலங்கள் களஞ்சியப்படுத்தல் வசதிக்கு (SSSF) மாற்றப்படவுள்ள மூலங்களை அங்கு களஞ்சியப்படுத்துவதற்குப் பொருத்தமான கொள்கலன்களை தயாரிக்குமாறு இலங்கை அணுசக்தி சபைக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

பேரவைக்குச் சொந்தமான CWSF இல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அனைத்து கதிர்வீச்சுக் கழிவுகளையும் பேரவை தரம்பிரித்து வேறுபட்ட கதிர்வீச்சுப் பொருட்களும் நோய்த்தொற்று மூலங்களும்

இனங்காணப்பட்டன. அவ்வாறான நோய்த்தொற்று மூலங்கள் பொலிதீன் உறைகளில் அடைக்கப்பட்டு மேலும் தொற்றுக்கள் ஏற்படாத விதத்தில் பொறியிடப்பட்டன.

2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி எஞ்சியுள்ள கதிரியக்க மூலங்கள் அனைத்தையும் இலங்கை அணுசக்திச் சபைக்கு பட்டியலொன்றைத் தயாரித்து உத்தியோகபூர்வமாக பேரவை கையளித்ததுடன் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

### கதிரியக்க பொருட்களின் போக்குவரத்தின் போது பாதுகாப்பளித்தல்

இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரப்படையின் ஒத்துழைப்புடன் உயர் வீரியம் கொண்ட கதிர்வீச்சு மூலங்களின் (வகை 1 மூலங்கள்) போக்குவரத்தின் போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை பேரவை ஒருங்கிணைப்புச் செய்தது. புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படவுள்ள 03 ''கொபல்ட் - 60'' கதிர்வீச்சு மூலங்களை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து மஹரகம அபேக்ஸா வைத்தியாலைக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் போக்குவரத்துச் செய்வதற்காக பொலிஸ் மற்றுறம் விசேட அதிரடிப்படையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தப் போக்குவரத்தை 2019 சனவரியில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது.

இறக்குமதியாளரால் வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் தகவல்கள், இதற்காக போக்குவரத்துக் கம்பனியின் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற ஆட்கள் மற்றும் வாகனங்களின் பாதுகாப்புத் தன்மை அத்துடன் போக்குவரத்தின் போது மூலங்களிற்காக வழங்கப்படுகின்ற பாதுகாப்பு என்பவற்றை மதிப்பிட்ட பின்னர் மேற்படி போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

## அவசரநிலையினை எதிர்கொள்ளல்

அதிகாரச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம், எதிர்கால அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலைமையினை எதிர்கொள்வதற்காக தேசிய அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலைமை எதிர்கொள்ளல் திட்டமொன்றை உருவாக்குவதற்கும் அவசரநிலை முகாமைத்துவ திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு உதவியினையும் ஆலோசனையும் வழங்குதற்குமான பொறுப்பு பேரவைக்கு உள்ளது. அத்துடன், அணு ஆபத்தினை முன்கூட்டியே அறிவிப்புச் செய்யும் நிலையம் என்ற வகையில் தேசிய அபாய அறிவிப்பு நிலையமாகவும் (என்டபிள்யூபி) ஐஏஈஏ உடன் தொடர்பாடல் செய்வதற்கான தேசிய தகைமைகொண்ட அதிகாரியாகவும் பேரவை காணப்படுகின்றது.

அணு அல்லது கதிர்வீச்சு அவசர தயாரிப்புக்கள் மற்றும் பேரவையினதும் ஆர்வமுள்ள தரப்பினர்களினதும் எதிர்கொள்ளல் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## அவசரநிலைக்கான தயார்படுத்தல்கள் மற்றும் எதிர்கொள்ளல் பயிற்சிகள்

அணு அல்லது கதிரியக்க அவசரநிலை தயார்படுத்தல்கள் மற்றும் எதிர்கொள்ளல் தொடர்பில் பின்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பேரவை நடாத்தியது.

- இலங்கை தரைப்படை இரசாயண, தாவரவியல், கதிரியக்க மற்றும் அணுவியல் குழுவிற்காக

| இடம் | திகதி |
|---|---|
| எம்பிலிபிடிய | 27 பெப்ரவரி 2018 |
| எம்பிலிபிடிய | 30-31 மே 2018 |
| வவுனியா | 15-16 ஒக்தோபர் 2018 |

- இலங்கை கடற்படை இரசாயண, தாவரவியல், கதிரியக்க மற்றும் அணுவியல் குழுவிற்காக

| இடம் | திகதி |
|---|---|
| SLAERC, களனிய | 24 ஏப்ரல் 2018 |
| SLAERC, களனிய | 09 ஒக்தோபர் 2018 |

- இலங்கை விமானப்படை இரசாயண, தாவரவியல், கதிரியக்க மற்றும் அணுவியல் குழுவிற்காக

| இடம் | திகதி |
|---|---|
| கட்டுநாயக்கா | 29 மார்ச் 2018 |
| கட்டுநாயக்கா | 11-12 யூன் 2018 |
| கட்டுநாயக்கா | 09 ஆகஸ்ட் 2018 |
| SLAERC, களனிய | 06 செப்தெம்பர் 2018 |



இலங்கை தரைப்படையின் CBRN குழுவிற்கு கதிரியக்க அவசரநிலை பயிற்சியினை நடாத்துதல்

## தேசிய அணு அல்லது கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவ திட்டத்தினை (ஈஎம்பி) வரைதல்

தேசிய அணு அல்லது கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவ திட்டத்தினை (அவசரநிலை முகாமைத்துவத் திட்டம்) வரைவதற்கான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு ஐஏஈஏ இன் அவசரநிலை முகாமைத்துவம் மீதான தொழில்நுட்ப ஆவணங்களிற்கு இணங்க ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டது. அவசரநிலை முகாமைத்துவ திட்டத்தின் வரைவானது பேரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றால் மீளாய்வு செய்யப்பட்டு இறுதி வரைவு தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆர்வமுள்ள தரப்பினரினதும் பொறுப்புக்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த அவசரநிலை முகாமைத்துவ திட்டம் 2018 மார்ச் 02 ஆந் திகதி ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது. திருத்திய வரைபு கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்புடைய அமைச்சுக்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. 2018 நவம்பர் 12 – 16 ஆந் திகதி வரையான காலத்தில் ஐஏஈஏ இன் நிபுணருடன் (கலாநிதி மர்ஜான் டிகாவிசீ) திருத்திய வரைவு மீளாய்வு செய்யப்பட்டு அவரது அறிவுறுத்தல்களின் பிரகாரம் திருத்தங்கள் செய்யப்பட்டன. அவசரநிலை தயார்படுத்தல்களிற்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியோரால் இறுதித் திட்டம் தயாரித்துவரப்படுகின்றது.

## அவசரநிலை தேகாப்பியாசங்கள்

ஐஏஈஏ கொன்வே-ஒ சர்வதேச அவசரநிலை எதிர்கொள்ளல் தேகாப்பியாசங்களில் பங்குபற்றியமை.

பிரதான அணு அல்லது கதிரியக்க அவசர நிலைமைகளை எதிர்கொள்ளலை மதிப்பிடுதலும் அவசர நிலைமைகளை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் இயலுமைகளின் பலம்வாய்ந்த மற்றும் நலிவான பரப்புகளை குறிப்பாக இனங்காண்பதும் “கொன்வெக்ஸ்-3” என்ற பயிற்சிநெறிகளின் குறிக்கோளாகும். அணுப் பாதுகாப்பு மற்றும் அணுப் பராமரிப்பிற்குப் பொறுப்பாக உள்ள நிறுவனங்களிடையே நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தேசிய மற்றும்/அல்லது சர்வதேச அவசர நிலைமகளை எதிர்கொள்ளல் முறைமைகளை முன்னேற்றுவதற்குத் தேவையான பரப்புக்களை இனங்காண்பதற்கான வாய்ப்பினை “கொன்வெக்ஸ்-3” (2018) வழங்கியிருந்தது.

பின்வரும் அணுவியல் அல்லது கதிரியக்க அவசரநிலை 04 “கொன்வெக்ஸ்-” தேகாப்பியாசங்கள் ஐஏஈஏ இன் சர்வதேச அவசரநிலைமைகள் நிலையத்தின் (IAEA-IEC) இணையதளத்தினூடாக நடாத்தப்பட்டன.

i) கொன்வெக்ஸ் -2a 2018 மார்ச் 08 ஆந் திகதிய தேகாப்பியாசங்கள்
ii) கொன்வெக்ஸ் – 1b 2018 ஒக்தோபர் 09 ஆந் திகதிய தேகாப்பியாசங்கள்
iii) கொன்வெக்ஸ் – 2b 2018 ஒக்தோபர் 15 மற்றும் 16 ஆந் திகதிய தேகாப்பியாசங்கள்
iv) கொன்வெக்ஸ் – 2c 2018 நவம்பர் 27 ஆந் திகதிய தேகாப்பியாசங்கள்

இந்த தேகாப்பியாசங்களின் ஒட்டுமொத்த இலக்குகளாவன:

- பாரதூரமான அணு அவசரநிலையொன்றின் போது எதிர்கொள்ளல் முன்னேற்பாடுகளை மதிப்பிடுவதற்காக அரசாங்கங்கள் மற்றும் தொடர்புடைய சர்வதேச அமைப்புக்களை அனுமதித்தல்.
- சர்வதேச அவசரநிலை முகாமைத்துவ முறைமையினை மதிப்பிடுதல். உதாரணமாக: விபத்துக்கள் மற்றும் அவசரநிலை தொடர்பாடலிற்கான தொழிற்பாட்டு வழிகாட்டல் (IEComm), ஐஏஈஏ இன் எதிர்கொள்ளல் மற்றும் உதவி வலைப்பின்னல் (RANET) மற்றும் சர்வதேச அமைப்புக்களின் கூட்டு கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவ திட்டத்திலுள்ள (JPLAN) ஏற்பாடுகள்.
- அரசாங்கங்களுக்கு இடையிலான இரு-தரப்பு/பல்-தரப்பு நேரடித் தொடர்பாடல்களை பரிசோதித்தல்.
- தேசிய வேலைத்திட்டங்களில் இனங்காண முடியாதுள்ள நற் பழக்கங்கள் மற்றும் முன்னேற்றத்திற்குத் தேவையான பரப்புக்களை இனங்காணல்

ஐஏஈஏ இன் தொடர்பாடல் முறைமை, மற்றும் அணு மற்றும் கதிர்வீச்சு அவசர நிலைமைகளில் ஐஏஈஏ இன் சர்வதேச அவசர நிலைமைகள் நிலையத்தின் தொடர்பாடல் முறைமையின் அடிப்படையிலமைந்த இணையதளத்தினூடாக ஐஏஈஏ உடனும் ஏனைய நாடுகளுடனும் தொடர்பாடல் செய்யும் முறையினை அறிந்துகொள்வதற்கு இத்தேகாப்பியாசங்கள் பயன்பட்டன.

## கௌரவ திரு. யுகியா அமானோ, ஐஏஈஏ இன் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ விஜயம் 2018 மார்ச் 15

கௌரவ திரு. யுகியா அமானோ, ஐஏஈஏ இன் பணிப்பாளர் நாயகம் அவர்கள் 2018 மார்ச் 15 ஆந் திகதி இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு வருகைதந்திருந்தார். அவரது வருகையினை கௌரவிக்கும் விதத்தில் அன்றைய தினம் பேரவையினதும் இலங்கை அணுசக்திச் சபையினதும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் விசேட விழாவொன்று நடாத்தப்பட்டது. மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இலங்கை அணுசக்திச் சபையின் தலைவர் வரவேற்புரையினை நிகழ்த்தினார். ஆவர் தனது உரையில் இந்த மறக்கமுடியாத நிகழ்வின் குறிக்கோள்களை தெளிவுபடுத்தினார்.

பேரவையின் பணிப்பாளர் நாயகம் தனது உரையில் ஐஏஈஏ இன் தேவைப்பாடுகளிற்கு இணங்க அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் களப்பரிசோதனை முறைமையினை தாபிப்பதற்காக பேரவையினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் இலங்கையில் ஒழுங்குபடுத்தல் உட்கட்டமைப்புகள் அத்துடன் இலங்கையினால் ஐஏஈஏ உடன் கைச்சாத்திட்டுள்ள சாசனங்களை அமுல்படுத்துவதற்காக பேரவையினதும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினதும் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். இலங்கையில் ஒழுங்குபடுத்தல் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காக ஐஏஈஏ இடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால உதவிகள் குறித்தும் அவர் தெளிவுபடுத்தினார். இராஜாங்க அமைச்சர் அவரது உரையில் பல்வேறுபட்ட விதத்தில் அணுத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கைக்கு ஈஏஈஏ இனால் வழங்கப்படுகின்ற உதவிகளிற்காக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

அணுத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையின் அதிகாரத்தரப்புக்களுடன் எல்லாவேளையிலும் ஐஏஈஏ தனது ஒத்துழைப்பினை வழங்குமென கௌரவ யுகியா அமானோ தனது உரையில் குறிப்பிட்டதுடன் பேரவையின் எதிர்காலக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு ஐஏஈஏ உதவும் என அவர் மேலும் குறிப்பிட்டார். பேரவையின் தலைவரால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. ஐஏஈஏ இன் பணிப்பாளர் நாயகத்தின் விஜயம் இலங்கைக்கும் ஐஏஈஏ இற்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பினை மேலும் பலப்படுத்தியிருந்தது.

ஒழுங்கமைத்தல் முறைமையினை பலப்படுத்துவதற்காக, அனுமதிப்பத்திரம் பெற்ற வசதிகளிலும் அவ்வாறே ஒழுங்கமைத்தல் அதிகாரத்தரப்பிலும் பயிற்சிபெற்ற திறன்கொண்ட ஆட்கள் காணப்படுதல் இன்றியமையாததாகும். எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றியானது பாரியளவில் தங்கியிருப்பது அதன் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நிபுணத்துவத்திலேயாகும். மேற்குறித்த நோக்கத்தை அடைவதற்காக, அனுமதிப்பத்திரம் பெற்ற வசதிகளின் கதிர்வீச்சுத் தொழிலாளர்கள் மற்றும் கதிர்வீச்சு மற்றும் அணுப் பாதுகாப்பு தொடர்பான அவர்களது அறிவை மேம்படுத்த வேண்டிய எதிர்கொள்ளல் படையணி உத்தியோகத்தர்களிற்காக பேரவையினால் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன் பேரவையின் பதவியணியினருக்கு வெறிநாட்டுப் பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட்டன.

**2018 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தில் கதிர்வீச்சுத் தொழிலார்கள் மற்றும் எதிர்கொள்ளல் படையணிக்காக கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவம் தொடர்பில் பேரவையினால் நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும்**

| இல. | தலைப்பு | இடம் | திகதி | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அரசாங்க வைத்தியசாலைகளிலுள்ள கதிர்வீச்சுத் தொழிலாளர்களிற்கான நோய் கண்டிறிதல் மற்றும் கதிரியக்க தலையீடுகளுடன் தொடர்புடைய கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் தர உத்திரவாதம் மீதான தேசிய பயிற்சிப் பாடநெறி | இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை | 01.10.2018<br>05.10.2018 | 18 |
| 02 | கதிர்வீச்சு அவசர நிலைமையினை முதலில் எதிர்கொள்கின்றவர்கள் மற்றும் அவசரநிலை அணியிலுள்ள உறுப்பினர்களிற்கான தேசிய பயிற்சிப் பாடநெறி | இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை | 19.12.2018<br>21.12.2018 | 36 |
| 03 | அணு மின்வலு ஆலைகளிற்கான அரசாங்க, நீதி மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகம் மீதான தேசிய செயலமர்வு | கொழும்பு | 23.04.2018<br>26.04.2018 | 28 |

**மீளாய்வாண்டு காலத்தில் எதிர்கொள்ளல் படைப்பிரிவின் உத்தியோகத்தர்களிற்காக விசேட அதிரடிப்படையுடன் இணைந்து கடுகுருந்த மற்றும் களுத்துறை பயிற்சிக் கல்லூரிகளில் பேரவையினால் நடாத்தப்பட்ட கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவம் மீதான பயிற்சிப் பாடநெறிகள்.**

| எதிர்கொள்ளல் படை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|
| விமானப் படை | 25 |
| பொலிஸ் 119 ஆவது பிரிவு | 67 |
| விசேட அதிரடிப்படை / பொலிஸ் (சனாதிபதி/அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவுகள்) | 139 |
| விசேட அதிரடிப்படை | 110 |

**2018 சனவரி முதல் திசெம்பர் வரை பேரவையின் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இடம்பெற்ற கருத்தரங்குகள்/ பயிற்சி நிகழ்ச்சிகள்/ செயலமர்வுகள்/ கூட்டங்களில் கலந்துகொள்ளல்**

**பங்குபற்றிய வெளிநாட்டு கருத்தரங்குகள்/ பயிற்சி நிகழ்ச்சிகள்/ செயலமர்வுகள்/ கூட்டங்கள்/ மாநாடுகள்**

| உத்தியோகத்தரின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | அனுசரணை | நாடு |
|---|---|---|---|---|
| கலாநிதி. சமன் ஹேவமான்ன தலைவர் | ஐஏஈஏ பொது மாநாட்டின் 62 ஆவது வழமையான அமர்வு | 17.09.2018 21.09.2018 | இலங்கை அரசாங்கம் | IAEA அவுஸ்ரியா |
| திரு. எச்.எல். அனில் ரன்ஜித் பணிப்பாளர் நாயகம் | அணுப் பயங்கரவாதச் சட்ட மீறல்கள், அணுப் பொருட்களின் பௌதீகப் பாதுகாப்பு மற்றும் அவற்றின் 2005 திருத்தங்கள் மீதான சர்வதேச சாசனங்களை ஐக்கியப்படுத்தலுடன் தொடர்புடைய சர்வதேச செயலமர்வு | 20.03.2018 21.03.2018 | UNDOC | வியன்னா, அவுஸ்ரியா |
| | அணு மின்வலு மீதான அரசாங்க ஆர்வத்திற்கான ஒருங்கிணைந்த அணுப் பாதுகாப்பு உதவித் திட்டங்கள் தொடர்பான சர்வதேசக் கூட்டம் | 16.04.2018 19.04.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | இலங்கை கோட்பாடுகளிற்கான மேலதிக உடன்படிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்கமைத்தல் வேலைத்திட்டம் மீதான செயலமர்வு | 30.04.2018 04.05.2018 | US DOE | பங்கொக் தாய்லாந்து |
| | விபத்துக்கள் மற்றும் நெரிசலான தரவடிப்படைக்கான தொடர்புகொள்ளல் புள்ளிவிபர நோக்கிலமைந்த முற்தரப்பு தொழில்நுட்பக் கூட்டம் | 08.05.2018 10.05.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | முன்கூட்டி அறிவித்தல் உடன்பாடு மற்றும் உதவி உடன்பாட்டின் கீழ் இனங்காணப்பட்ட தகைமையுள்ள அதிகாரத்தரப்புப் பிரதிநிதிகளின் ஒன்பதாவது கூட்டம் | 18.06.2018 22.06.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | ஐஏஈஏ பொது மாநாட்டின் 62 ஆவது வழமையான அமர்வு | 17.09.2018 21.09.2018 | இலங்கை அரசாங்கம் | வியன்னா, அவுஸ்ரியா |
| | இலங்கை சுங்கத்திற்கு கொள்வனவு செய்யப்படவுள்ள கொள்கலன் ஸ்கேன்னர்ஸ் இற்கான தொழிற்சாலை ஏற்றுக்கொள்ளல் பரிசோதனையில் பங்கேற்றல் | 03.10.2018 08.10.2018 | இலங்கை சுங்கம் | ஐக்கிய இராச்சியம் |
| | கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு: தடுத்தல் மற்றும் கண்டறிதலிற்கான வழிகள் | 03.12.2018 07.12.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| ரீ.எச்.எஸ். சாந்த பணிப்பாளர் (அங்கீகாரம்) | கதிரியக்க மூலப் பாதுகாப்பு தொடர்பில் தொழிற்படும் குழுவின் ஏழாவது கூட்டம் | 23.04.2018 26.04.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | ஊழியரிடல் உத்திகள் மற்றும் ஒழுங்கமைத்தல் நிறுவனங்களின் பயிற்சிகள் தொடர்பான ஐஏஈஏ இன் பிராந்திய செயலமர்வு | 05.08.2018 09.08.2018 | IAEA | தோஹா கட்டார் |

| உத்தியோகத்தரின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | அனுசரணை | நாடு |
|---|---|---|---|---|
| திரு. யூ.டபிள்யூ.கே.எச். தி. சில்வா பிரதிப் பணிப்பாளர் (அங்கீகாமளித்தல்-கைத்தொழில் பிரயோகங்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) | கதிரியக்க மூலங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வழிகாட்டல்களை அமுல்படுத்துதல் மீதான சட்ட மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களிற்கான ஐஏஈஏ இன் திறந்த மாநாடு | 11.06.2018<br>13.06.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | அணு மற்றும் கதிரியக்க மூலங்களின் போக்குவரத்தின் போதான பாதுகாப்பு மீதான தொழில்நுட்பக் கூட்டம் | 09.07.2018<br>13.07.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| திரு. நீல் பர்ணாந்து பிரதிப் பணிப்பாளர் (களப்பரிசோதனை-மருத்துவ பிரயோகங்கள்) | அவசர நிலைமையொன்றை அறிவிப்புச் செய்தல் மற்றும் உதவிகளைக் கோருதல் மீதான ஐஏஈஏ இன் செயலமர்வு | 26.06.2018<br>28.06.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| திரு. கே.எஸ்.எஸ். குமார பிரதிப் பணிப்பாளர் (அங்கீகாரம்-மருத்துவ பிரயோகங்கள்) | சுற்றாடல் கண்காணித்தல் நிகழ்ச்சித்திட்டம் - மாதிரி உபாயங்கள் மற்றும் அளவு மதிப்பிடல் ஒன்றை தாபிப்பதற்கான ரீசீ வலயக் கூட்டம் | 15.01.2018<br>19.01.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | கதிர்வீச்சுப் பாதுகாப்பு உட்கட்டமைப்பினை பலப்படுத்தல் மீதான RAS/09/089 வலயச் செயற்திட்டத்தின் முதலாவது ஒருங்கிணைப்புக் கூட்டம் | 16.04.2018<br>20.04.2018 | IAEA | மனிலா பிலிப்பைன்ஸ் |
| திரு. பிரகீத் கடதுன்ன பிரதிப் பணிப்பாளர் (களப்பரிசோதனை-கைத்தொழில் பிரயோகங்கள், அமுலாக்கம்) | அணு பௌதீகப் பொருட்கள் மற்றும் அணு வசதிகள் மீதான பயிற்றுவிப்போர் பாடநெறி வலயப் பயிற்சி | 05.02.2018<br>09.02.2018 | IAEA | டயஜியோன் கொரியக் குடியரசு |
| | சர்வதேச அணு மற்றும் கதிரியக்க நிகழ்வு அளவிடல் (INES) பயன்படுத்துனர் கையேட்டினை வரைதல் மீதான தொழில்நுட்பக் கூட்டம். | 23.04.2018<br>27.04.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | ஒழுங்குபடுத்தல் களப்பரிசோதனை மற்றும் அமுலாக்கம் மீதான வலயச் செயலமர்வு | 05.11.2018<br>09.11.2018 | IAEA | உலன்பதார் மங்கோலியா |
| திருமதி சீ.எஸ். ஹேரத் விஞ்ஞான உத்தியோகத்தர் | சிறிய வசதிகளை பிரமாணப்படுத்துதல் மீதான சர்வதேச செயற்திட்டக் கூட்டம் | 25.06.2018<br>28.06.2018 | IAEA | வியன்னா, அவுஸ்ரியா |
| | மட்டுப்படுத்திய அணுச் செயற்பாடுகளைக் கொண்ட நாடுகளில் சர்வதேச பாதுகாப்பேற்பாடுகளை அமுல்படுத்துதலிற்கான வெடிப்புறாத பொருட்களின் கோட்பாடுகள் மீதான பயிற்சிப் பாடநெறி | 09.07.2018<br>13.07.2018 | US DOE /NNSA | புதிய மெக்சிகோ ஐக்கிய அமெரிக்கா |
| திரு. கே.ஜீ.கே.யூ. கமகே விஞ்ஞான உத்தியோகத்தர் | அவசரநிலை கைத்தொழில்களிலுள்ள யுரேனியம் மற்றும் ஏனைய இயற்கையாக தோற்றுகின்ற கதிரியக்கப் பொருட்களிற்கான (NORM) கொள்கை மற்றும் ஒழுங்கமைத்தல் வேலைத்திட்டம் மீதான சர்வதேச செயலமர்வு | 29.01.2018<br>02.02.2018 | IAEA | அருஸா தன்சானிய ஐக்கிய குடியரசு |
| | ஒழுங்குபடுத்தல் அமைப்பினால் பாதுகாப்பு மீளாய்வு மற்றும் மதிப்பீடுகளை செய்தல் மீதான வலயச் செயலமர்வு | 09.07.2018<br>13.07.2018 | IAEA | பங்கொக் தாய்லாந்து |

| உத்தியோகத்தரின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | அனுசரணை | நாடு |
|---|---|---|---|---|
| திரு. எச்.ஜே. பிரேமகுமார விஞ்ஞான உத்தியோகத்தர் | இணையவழி சுற்றாடல் கண்காணித்தல் முறைமை மீதான வலயச் செயலமர்வு | 07.05.2018 11.05.2018 | IAEA | புகட், தாய்லாந்து |
| | அணுத் தொழில்நுட்ப கருத்தரங்கு FY 2018 “அணு ஆலை பாதுகாப்பு பாமநெறி” | 16.10.2018 09.11.2018 | MEXT யப்பான் | ரிசுருகா, யப்பான் |
| செல்வி நிர்மாலி கருணாரத்ன விஞ்ஞான உத்தியோகத்தர் | ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தில் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ முறைமையொன்றை தாபித்தல் மீதான வலயச் செயலமர்விற்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்தல். | 09.04.2018 13.04.2018 | IAEA | சங்கய், சீனா |
| | இரசாயணவியல், தாவரவியல், கதிர்வீச்சு, அணு மற்றும் வெடி பொருட்களை இனங்காணல் பயிற்சி (CBRNE – CIT) | 08.07.2018 12.07.2018 | USDOE | மாலே, மாலைதீவு |
| செல்வி. ஈ.டீ.ஆர். பிரபானி சட்ட உத்தியோகத்தர் | இலங்கை கோட்பாடுகளிற்கான மேலதிக உடன்படிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்கமைத்தல் வேலைத்திட்டம் மீதான செயலமர்வு | 30.04.2018 04.05.2018 | USDOE | பங்கொக், தாய்லாந்து |
| | பயன்படுத்திய எரிபொருள் முகாமைத்துவப் பாதுகாப்பு மற்றும் கதிரியக்க கழிவு முகாமைத்துவப் பாதுகாப்பு மீதான கூட்டு உடன்படிக்கைகளை மேம்படுத்துவதற்கான வலயச் செயலமர்வு. | 23.10.2018 25.10.2018 | IAEA | ஜகார்த்தா, இந்தோனேசியா |
| திரு. எல்.எச்.ஜே. குமார விஞ்ஞான உத்தியோகத்தர் | கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மீதான பட்டப்பின்படிப்பு கற்கை நெறி | 23.04.2018 19.10.2018 | IAEA | காஜாங், மலேசியா |
| திரு. டபிள்யூ.எம்.டீ.எம். பிரியந்த | அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அணுப் பாதுகாப்பு அணியொன்றை தாபித்தல் மீதான சர்வதேச பயிற்சிப் பாடநெறி | 21.05.2018 25.05.2018 | IAEA | ரசியக் குடியரசு |
| | தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளிற்கான ஒருங்கிணைந்த அணுப் பாதுகாப்பு ஆதரவுத் திட்டங்களின் (INSSPs) மீதான வலயக் கூட்டம் | 05.11.2018 08.11.2018 | IAEA | பீஜிங், சீனா |
| திரு. ஏ.பி. மதுசங்க | இரசாயணவியல், தாவரவியல், கதிர்வீச்சு, அணு மற்றும் வெடி பொருட்களை இனங்காணல் பயிற்சி (CBRNE – CIT) | 08.07.2018 12.07.2018 | US DOE | மாலே, மாலைதீவு |
| | கதிரியக்கப் பொருட்களை பயன்படுத்துதல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் பாதுகாப்பு மீதான வலயப் பயிற்சிப் பாடநெறி | 20.08.2018 24.08.2018 | IAEA | டோகாய், யப்பான் |
| திரு. டபிள்யூ.டபிள்யூ..ஆர்.எல். மெதிஸ் | மட்டுப்படுத்திய அணுச் செயற்பாடுகளைக் கொண்ட நாடுகளில் சர்வதேச பாதுகாப்பேற்பாடுகளை அமுல்படுத்துதலிற்கான வெடிப்புறாத பொருட்களின் கோட்பாடுகள் மீதான பயிற்சிப் பாடநெறி | 09.07.2018 13.07.2018 | US DOE/ NNSA | நியூ மெக்ஸிகோ USA |

### பங்குபற்றிய உள்நாட்டு கருத்தரங்குகள்/ பயிற்சி நிகழ்ச்சிகள்/ செயலமர்வுகள்/ கூட்டங்கள்/ மாநாடுகள்:

| உத்தியோகத்தரின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | இடம் | அனுசரணை |
|---|---|---|---|---|
| திரு. எச்.எல். அணில் ரன்ஜித் பணிப்பாளர் நாயகம் | வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மீதான செயலமர்வு | 16-07-2018 19-08-2018 | கொழும்பு | US DOE |
| | ஆர்வமுள்ள தரப்பினரால் வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை வரைதல் செயலமர்வு | 24-09-2018 27-09-2018 | வெலிகம | US DOE |
| ரீ.எச்.எஸ். சாந்த பணிப்பாளர் (அங்கீகாரம்) | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018 06-04-2018 | SLAERC | IAEA |
| | வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மீதான செயலமர்வு | 16-07-2018 19-08-2018 | கொழும்பு | US DOE |
| | பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குவதனை எதிர்த்தல் மற்றும் பாரிய அழிவு ஆயுதங்களின் தகவல்களை திரட்டுதல் செயலமர்வு | 27-08-2018 28-08-2018 | கொழும்பு | வெளிநாட்டு அமைச்சு |
| | ஆர்வமுள்ள தரப்பினரால் வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை வரைதல் செயலமர்வு | 24-09-2018 27-09-2018 | வெலிகம | US DOE |
| | தகவல் அறியும் சட்டம் தொடர்பான சர்வதேச மாநாடு | 28-09-2018 | கொழும்பு | நிதி அமைச்சு |
| திரு. யூ.டபிள்யூ.கே.எச்.தி. சில்வா பிரதிப் பணிப்பாளர் (அங்கீகாமளித்தல்-கைத்தொழில் பிரயோகங்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018 06-04-2018 | SLAERC | IAEA |
| | கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் செயற்பாட்டு குளாய்வழிப் பயிற்சிநெறி | 23-04-2018 26-04-2018 | கட்டுநாயக்கா | இன்டர்போல் & USDOE |
| | வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மீதான செயலமர்வு | 16-07-2018 19-07-2018 | வெலிகம | US DOE |
| | ஆர்வமுள்ள தரப்பினரால் வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை வரைதல் செயலமர்வு | 24-09-2018 27-09-2018 | வெலிகம | US DOE |
| திரு. கே.என்.ஆர்.பர்ணாந்து பிரதிப் பணிப்பாளர் (களப்பரிசோதனை-மருத்துவ பிரயோகங்கள்) | 6 ஆவது வலய மீளாய்வுக் கூட்டம் | 06-03-2018 09-03-2018 | கொழும்பு | US DOE |
| | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018 06-04-2018 | SLAERC | IAEA |
| | அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரசாங்கத்தின் சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான வேலைத்திட்டம் மீதான தேசிய செயலமர்வு | 23-04-2018 26-04-2018 | கொழும்பு | IAEA |

| உத்தியோகத்தரின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | இடம் | அனுசரணை |
|---|---|---|---|---|
| | வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மீதான செயலமர்வு | 16-07-2018<br>19-07-2018 | வெலிகம | US DOE |
| | ஆர்வமுள்ள தரப்பினரால் வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை வரைதல் செயலமர்வு | 24-09-2018<br>27-09-2018 | வெலிகம | US DOE |
| திரு. கே.எஸ்.எஸ். குமார பிரதிப் பணிப்பாளர் (அங்கீகாரம்-மருத்துவ பிரயோகங்கள்) | வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மீதான செயலமர்வு | 16-07-2018<br>19-08-2018 | வெலிகம | US DOE |
| | ஆர்வமுள்ள தரப்பினரால் வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை வரைதல் செயலமர்வு | 24-09-2018<br>27-09-2018 | வெலிகம | US DOE |
| | அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரசாங்கத்தின் சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான வேலைத்திட்டம் மீதான தேசிய செயலமர்வு | 23-04-2018<br>26-04-2018 | கொழும்பு | IAEA |
| திரு. பிரகீத் கடதுன்ன பிரதிப் பணிப்பாளர் (களப்பரிசோதனை-கைத்தொழில் பிரயோகங்கள்,அமுல்படுத்தல்) | NSDD /USA இனால் நடாத்தப்பட்ட SOP செயலமர்வு | 19-02-2018<br>21-02-2018 | கொழும்பு | NSDD/USA சுங்கம் |
| | 6 ஆவது வலய மீளாய்வுக் கூட்டம் | 06-03-2018<br>09-03-2018 | கொழும்பு | US DOE |
| | கூட்டு வெளிவாரி தொடர்முன்னேற்ற செயல்நடவடிக்கைத் திட்டச் செயலமர்வு | 20-03-2018<br>21-03-2018 | கொழும்பு | MOH/WHO |
| | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018<br>06-04-2018 | SLAERC | IAEA |
| | வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மீதான செயலமர்வு | 16-07-2018<br>19-07-2018 | வெலிகம | US DOE |
| | ஆர்வமுள்ள தரப்பினரால் வேலைத்தள பாதுகாப்புத் திட்டத்தினை வரைதல் செயலமர்வு | 24-09-2018<br>27-09-2018 | வெலிகம | US DOE |
| திரு. எச்.ஜே. பிரேமகுமார விஞ்ஞான உத்தியோகத்தர் | வியாபாரக் கட்டுப்பாட்டு கோட்பாட்டு உத்திகள் | 19-02-2018<br>23-02-2018 | கொழும்பு | US தூதரகம் |
| | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018<br>06-04-2018 | SLAERC | IAEA |
| | தேசிய மனித வள அபிவிருத்தியும் பாதுகாப்பும் | 03-10-2018<br>10-10-2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| | அணு மின்வலுத் தொழில்நுட்பம், அணு மின்வலுக் கல்வி மற்றும் பயிற்சி மீதான தேசிய செயலமர்வு | 10-12-2018<br>12-12-2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |

| உத்தியோகத்தரின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | காலம் | இடம் | அனுசரணை |
|---|---|---|---|---|
| திருமதி. சீ.எஸ். ஹேரத் விஞ்ஞான உத்தியோகத்தர் | UNSCR 1540 உடன் இணங்கும் விதத்தில் தந்துரோபாய வியாபாரக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துதல் மீதான செயலமர்வு | 21-03-2018 23-03-2018 | கொழும்பு | US தூதரகம் |
| | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018 06-04-2018 | SLAERC | IAEA |
| | இலங்கையில் அணு மின்வலு நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திக்கான 19 ஆவது உட்கட்டமைப்பு சிக்கலை அறிமுகப்படுத்துதல் செயலமர்வு | 16-07-2018 19-07-2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| | அணு மின்வலுத் தொழில்நுட்பம், அணு மின்வலுக் கல்வி மற்றும் பயிற்சி மீதான தேசிய செயலமர்வு | 10-12-2018 12-12-2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| திரு. கே.ஜீ.கே.யு. கமகே விஞ்ஞான உத்தியோகத்தர் | வியாபாரக் கட்டுப்பாட்டு கோட்பாட்டு உத்திகள் | 19.02.2018 23.02.2018 | கொழும்பு | US தூதரகம் |
| | இலங்கையில் அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வீதி வரைபடத்தை உருவாக்குதல். | 16.07.2018 19.07.2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| | இலங்கைக்கு அணு மின்வலு நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பு சிக்கல் மீதான செயலமர்வு | 08.10.2018 10.10.2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| | அணு மின்வலுத் தொழில்நுட்பம், அணு மின்வலுக் கல்வி மற்றும் பயிற்சி மீதான தேசிய செயலமர்வு | 10.12.2018 12.12.2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018 06-04-2018 | SLAERC | IAEA |
| திருமதி.என். பி. என். கருணாரத்ன விஞ்ஞான உத்தியோகத்தர் | தேசிய அணு அல்லது கதிரியக்க அவசரநிலை முகாமைத்துவத் திட்டம் மீதான முதலாவது ஆர்வமுள்ள தரப்புக் கூட்டம் | 02-02-2018 | கொழும்பு | SLAERC |
| | 6 ஆவது வலய மீளாய்வுக் கூட்டம் | 06-03-2018 09-03-2018 | கொழும்பு | US DOE |
| | ஒழுங்குபடுத்தல் அதிகாரத் தகவல் முறைமையினை பொருத்துதல் மீதான பயிற்சி | 02-04-2018 05-04-2018 | SLAERC | IAEA |
| | அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரசாங்கத்தின் சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான வேலைத்திட்டம் மீதான தேசிய செயலமர்வு | 23.04.2018 26.04.2018 | கொழும்பு | IAEA |
| | இலங்கையில் NPP இற்கான வீதி வரைபடத்தின் செயற்படு குழுவினைத் தாபித்தல் மீதான முதலாவது செயலமர்வு | 16-07-2018 19-07-2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேசிய கட்டுப்பாட்டு பட்டியல் மீதான பயிற்சி (EXBS) | 10-09-2018<br>11-09-2018 | கொழும்பு | US தூதரகம் |
| | இலங்கையில் NPP இற்கான வீதி வரைபடத்தின் செயற்படு குழுவினைத் தாபித்தல் மீதான இரண்டாவது செயலமர்வு | 08-10-2018<br>10-10-2018 | கொழும்பு | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| **39** | | | தனியாள் முன்னறிவிப்பு தொசி மீற்றர் | RAD60 | 246113 | 1 | | |
| **மொத்தம்** | | | | | | | | **9,981,016.97** |

**பட்டோலை – 1**

**2018.12.31 இல் உள்ளவாறான கடன்பட்டோர்**

| திகதி | பட்டியல் இல. | நிறுவனம் | விபரம் | பட்டியல் பெறுமதி |
|---|---|---|---|---|
| 03.12.2018 | 4425 | இலங்கை விமானப் படை, தியதலாவ | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4426 | இலங்கை விமானப் படை, பலாலி | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4427 | இலங்கை விமானப் படை, அம்பாறை | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4428 | இலங்கை விமானப் படைத்தளம், ரத்மலான | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4429 | இலங்கை விமானப் படை எகடமி, சீனக்குடா | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4430 | இலங்கை விமானப் படை வைத்தியசாலை, கொழும்பு | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4431 | இலங்கை விமானப் படைத்தளம், அநுராதபுரம் | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4432 | இலங்கை விமானப் படைத்தளம், வவுனியா | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4433 | இலங்கை விமானப் படை, ஏகல | LAPF | 2,000.00 |
| 03.12.2018 | 4434 | இலங்கை விமானப் படைத்தளம், கட்டுநாயக்க | LAPF | 2,000.00 |
| **மொத்தம்** | | | | **20,000.00** |

**பட்டோலை – 2**

**பதவியணிக் கடன்பட்டோர்**

| இல. | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திருமதி. ஏ. சந்திரசேகர | 3,800.00 |
| 2 | திரு. டபிள்யூ.ஏ.கே. லக்ஸ்மன் | 3,800.00 |
| 3 | திரு. எச்.எல்.ஏ. அணில் ரன்ஜித் | 3,800.00 |
| 4 | திரு. ஈ.ஆர். பிரேமசிரி | 7,177.37 |
| 5 | திருமதி. ஏ.ஏ.டீ.ஐ. துனுசிங்ஹ | 3,800.00 |
| 6 | திரு. என்.எஸ்.ஏ. பியதிஸ்ஸ | 3,800.00 |
| 7 | திரு. ரீ.எச்.எஸ் சாந்த | 3,800.00 |
| 8 | திரு. யூ.டபிள்யூ.கே.எச். தி.சில்வா | 3,800.00 |
| 9 | திருமதி. என்.என். பதுகே | 3,800.00 |
| 10 | திரு. கே.என்.ஆர். பர்ணாந்து | 9,284.89 |
| 11 | திரு. கே.பீ.ஐ.கே. கடதுன்ன | 3,800.00 |
| 12 | திரு. கே.எஸ். சாந்த குமார | 3,800.00 |
| 13 | திரு. கே.ஏ.டீ.ரீ. ஜயருவன் | 3,800.00 |
| 14 | திருமதி. சீ.எஸ். ஹேரத் | 3,800.00 |
| 15 | திருமதி. கே.ஜீ.கே.யூ. கமகே | 5,485.14 |
| 16 | செல்வி என்.பீ.என். கருணாரத்ன | 3,300.00 |
| 17 | திரு. கே.டீ.ரீ. ஜயருவன் | 3,800.00 |
| 18 | திரு. எல்.எச்.ஜே. பிரேமகுமார | 3,800.00 |
| 19 | திரு. பி.ஏ.டீ.ஐ.பி. அபயரத்ன | 3,800.00 |
| 20 | திரு. யூ.கே.டீ.ஜீ.டீ. உடவத்த | 3,800.00 |
| 21 | திரு. ஏ.பி. மதுசங்க | 3,800.00 |
| 22 | திரு. டபிள்யூ.டபிள்யூ.ஆர்.எல். மெதிஸ் | 3,800.00 |
| 23 | திருமதி. என்.பி.டபிள்யூ.டீ.டீ.டீ. ரொட்ரிகோ | 3,800.00 |
| 24 | திருமதி. டீ.டபிள்யூ.எம்.ஈ.ரீ. திஸ்ஸாநாயக்க | 3,800.00 |
| 25 | திரு. டபிள்யூ.எம்.டீ.எம். பிரியந்த | 3,800.00 |
| 26 | திரு. எல்.எச்.ஜே. குமார | 3,800.00 |

| | | |
|---|---|---|
| 27 | திருமதி கே.ரீ.ரீ. தில்ருக்ஷி | 3,800.00 |
| 28 | திரு. ஜே.எம்.சீ. ஏகநாயக்க | 3,800.00 |
| 29 | திரு. ஏ.பீ.ஏ. நிசாந்த | 3,800.00 |
| 30 | திருமதி டபிள்யூ.எஸ்.எல். பெரேரா | 3,800.00 |
| 31 | செல்வி பீ.டீ.என்.எம். குமாரி | 3,800.00 |
| 32 | செல்வி ஆர்.பி.எம். சந்துனி | 3,800.00 |
| 33 | செல்வி கே.சீ. லவந்தி | 3,800.00 |
| 34 | திருமதி கே.எல்.ரீ. தில்ஹானி | 3,800.00 |
| 35 | செல்வி பி.பி.ஆர்.எஸ். கீதானி | 3,800.00 |
| 36 | திருமதி பி.டீ. இமல்கா ரூபசிங்ஹ | 3,800.00 |
| 37 | செல்வி எம்.ஐ.ரீ. தி சில்வா | 3,800.00 |
| | **மொத்தம்** | **150,647.40** |

**பட்டோலை – 3**
**முற்பணங்களும் கடன்களும் - விழா முற்பணம் மற்றும் இடர் கடன்கள்**

| இல. | பெயர் | தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| **விழா முற்பணம்** | | | |
| 1 | திரு. என்.எஸ்.ஏ. பியதிஸ்ஸ | 10,000.00 | |
| | | | **10,000.00** |
| **இடர் கடன்டகள்** | | | |
| 1 | திரு. கே.பீ.ஜ.கே. கடதுன்ன | 31,249.98 | |
| 2 | திரு. டபிள்யூ.ஏ.கே. லக்ஷ்மன் | 46,874.97 | |
| 3 | திரு. கே.எஸ். சாந்த குமார | 41,666.64 | |
| 4 | திரு. கே.என்.ஆர். பர்ணாந்து | 46,874.97 | |
| 5 | திருமதி. கே.ஜீ.கே.யூ. கமகே | 72,915.88 | |
| 6 | திரு. ஈ.ஆர். பிரேமசிரி | 67,141.62 | |
| 7 | திரு. கே.டீ.ரீ. ஜயருவன் | 48,343.75 | |
| 8 | திருமதி. சீ.எஸ். ஹேரத் | 104,166.60 | |
| 9 | திரு. எல்.எச்.ஜே. குமார | 145,833.24 | |
| 10 | திருமதி. என்.பி.டபிள்யூ.டீ.டீ.டீ. ரொட்ரிகோ | 145,833.24 | |
| 11 | திரு. என்.எஸ்.ஏ. பியதிஸ்ஸ | 145,833.24 | |
| 12 | திருமதி. என்.என். பதுகே | 151,041.57 | |
| 13 | திருமதி ஏ.ஏ.டீ.ஜ. துனுசிங்ஹ | 166,666.56 | |
| 14 | திருமதி கே.ரீ.ரீ. தில்ருக்ஷி | 155,340.58 | |
| 15 | திரு. ஜே.எம்.சீ. ஏகநாயக்க | 159,428.49 | |
| 16 | திரு. ஏ.பீ. மதுசங்க | 203,124.87 | |
| 17 | திருமதி பி.டீ. இமல்கா ரூபசிங்ஹ | 202,821.52 | |
| 18 | திரு. எல்.எச்.ஜே. பிரேமகுமார | 239,583.18 | |
| | | | **2,174,740.90** |
| | **மொத்தம்** | | **2,184,740.90** |

**பட்டோலை – 4**

**வியாபார செலுத்தவேண்டியவை – கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுக்கள்**

| இல. | பெயர் | தோகை |
|---|---|---|
| 1 | அலுவலக பதவியணியினர் - மருத்துவ விடுமுறைகளைக் காசாக்கல் | 1,225,995.25 |
| 2 | அலுவலக பயிலுனர் - பயிலுனர் படிகள் | 9,000.00 |
| 3 | வருமா வரி திணைக்களம் - முத்திரரைத் தீர்வை | 1,975.00 |
| 4 | சிடி ஒடோ சேர்விசஸ் (தனியார்) லிமிடட் - எரிபொருளும் உராய்வுநீக்கியும் | 25,531.19 |
| 5 | அலுவலக பதவியணியினர் - மேலதிக நேரமும் விடுமுறை கொடுப்பனவும் | 18,980.21 |
| 6 | இலங்கை ரெலிகொம் - தொலைபேசி | 44,542.53 |
| 7 | மொபிரல் (தனியார்) லிமிடட் - தொலைபேசி | 26,230.33 |
| 8 | டயலொக் எக்ஸிடா பீஎல்சீ – தொலைபேசி | 5,947.68 |
| 9 | டயலொகபுரோட்டீபண்ட நெட்வோர்க்ஸ் (தனியார்) கம்பனி – தொலைபேசி | 10,842.25 |
| 10 | அலுவலக உத்தியோகத்தர் - பிரயாணம் | 1,350.00 |
| 11 | இலங்கை அணுசக்தி சபை - அலுவலக கட்டிட பேணுகை | 33,500.88 |
| 12 | இலங்கை அணுசக்தி சபை – இணையதளம், இலத்திரனியல் தபால் மற்றும் தொலைநகல் | 17,245.91 |
| 13 | இலங்கை அணுசக்தி சபை – மின்சாரம் | 81,164.53 |
| 14 | இலங்கை அணுசக்தி சபை – நீர் | 3,897.04 |
| 15 | எச்.ஆர். அனுரஜயசிரி – சம்பளக் கட்டுப்பாட்டுக் க/கு | 9,413.23 |
| 16 | சிலோன் மோட்டர் வேர்க்ஸ் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் - அலுவல வாகனப் பேணல் மற்றும் காப்புறுதி | 252,500.00 |
| 17 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - கணக்காய்வுக் கட்டணம் | 400,000.00 |
| **மொத்தம்** | | **2,168,116.03** |

**பட்டோலை – 5**

**கடன் செலுத்துதல் - இடர் கடன் மற்றும் விழா முற்பணம்**

| இல. | பெயர் | தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| **இடர் கடன்** | | | |
| 1 | திருமதி கே.ரீ.ரீ. தில்ருக்ஷி | 196,220.00 | |
| 2 | திரு. ஜே.எம்.சீ. ஏகநாயக்க | 196,220.00 | |
| 3 | திரு. ஏ.பீ. மதுசங்க | 250,000.00 | |
| 4 | திருமதி பி.டீ. இமல்கா ரூபசிங்ஹ | 221,260.00 | |
| 5 | திரு. எல்.எச்.ஜே. பிரேமகுமார | 250,000.00 | |
| | | | **1,113,700.00** |
| **விழா முற்பணம்** | | | |
| 1 | திருமதி. ஏ. சந்திரசேகர | 10,000.00 | |
| 2 | திரு. டபிள்யூ.ஏ.கே. லக்ஸ்மன் | 10,000.00 | |
| 3 | திருமதி. ஏ.ஏ.டீ.ஐ. துனுசிங்ஹ | 10,000.00 | |
| 4 | திரு. என்.எஸ்.ஏ. பியதிஸ்ஸ | 10,000.00 | |
| 5 | திருமதி. என்.என். பதுகே | 10,000.00 | |

| | | | |
|---|---|---|---|
| 6 | திரு. கே.பீ.ஐ.கே. கடதுன்ன | 10,000.00 | |
| 7 | திரு. கே.ஏ.ட.ரீ. ஜயருவன் | 10,000.00 | |
| 8 | திருமதி. கே.ஜீ.கே.யூ. கமகே | 10,000.00 | |
| 9 | செல்வி ஈ.டி.ஆர். பிரபானி | 10,000.00 | |
| 10 | திரு. பி.ஏ.ட.ஐ.பி. அபேரத்ன | 10,000.00 | |
| 11 | திரு. டபிள்யூ.டபிள்யூ.ஆர்.எல். மெதிஸ் | 10,000.00 | |
| 12 | திருமதி. என்.பி.டபிள்யூ.ட.ட.ட. ரொட்ரிகோ | 10,000.00 | |
| 13 | திரு. எல்.எச்.ஜே. குமார | 10,000.00 | |
| 14 | திருமதி கே.ரீ.ரீ. தில்ருக்ஷி | 10,000.00 | |
| 15 | திரு. ஏ.பீ.ஏ.எஸ். நிசாந்த | 10,000.00 | |
| | | | **150,000.00** |
| **மொத்தம்** | | | **1,263,700.00** |

## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

## பாதீட்டு தொகைகளை உள்ளபடியான தொகைகளுடன் ஒப்பீடுசெய்யும் கூற்று -2018

| குறியீடு | விபரம் | பாதீடு | | 2018.12.31 இல் உள்ளபடி செலவினம் | | வேறுபாடு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| | **ஆளுக்குரிய வேதனங்கள்** | | **29,411,000** | | **28,607,374** | | |
| 02/01 | சம்பளமும் கூலியும் | 18,062,000 | | 17,786,874 | | 275,126 | |
| 02/01A | பயிற்சிப் படிகள் | 150,000 | | 149,500 | | 500 | |
| 02/02 | ஊழியர் சேமலாப நிதியம் | 3,217,000 | | 3,161,007 | | 55,993 | |
| 02/03 | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 644,000 | | 632,201 | | 11,799 | |
| | | | | | | | |
| | **ஏனைய படிகள்** | | | | | | |
| 02/05 | வாழ்கைச்செலவுப் படி | 3,385,000 | | 3,286,509 | | 98,491 | |
| 02/04 | சீராக்கல் படிகள் | 693,000 | | 652,368 | | 40,632 | |
| 02/06 | தலைவரின் படி | 450,000 | | 342,791 | | 107,209 | |
| 02/08 | மருத்துவ காசாக்கல் | 1,300,000 | | 1,225,995 | | 74,005 | |
| 02/09 | ஊக்குவிப்பு | 200,000 | | 182,706 | | 17,294 | |
| 02/11 | உயர்தொழில் படி | 1,310,000 | | 1,187,423 | | 122,577 | |
| | | | | | | | |
| | **மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும்** | | | | | | |
| 02/07 | மே.நே. மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 500,000 | **500,000** | 384,168 | **384,168** | 115,832 | |
| | | | | | | | |
| | **பிரயாணச் செலவினம்** | | **2,100,000** | | **1,960,675** | | |
| 03//01 | பிரயாணச் செலவினம் (உள்நாடு) | 300,000 | | 185,852 | | 114,148 | |
| 03//02 | பிரயாணப் படி (வெளிநாடு) | 1,800,000 | | 1,774,823 | | 25,177 | |
| | | | | | | | |
| | **வழங்கல் மற்றும் தேவைகள்** | | **4,185,000** | | **3,351,059** | | |
| 03/03 | எழுதுகருவி அலுவலக தேவைகள் மற்றும் நுகர்ச்சிகள் | 950,000 | | 1,074,803 | | **(124,803)** | பேரவை யினால் தேசிய பயிற்சி நிகழ்ச்சி கள் நடாத்தி யமை காரணம ாக |
| 03/04 | எரிபொருளும் உராய்வு நீக்கியும் | 1,250,000 | | 585,971 | | 664,029 | |
| 03/04A | எரிபொருள் படி (தலைவர், பணிப்பாளர் நாய., பணிப்பாளர்) | 1,960,000 | | 1,670,285 | | 289,715 | |
| 03/05 | சீருடை | 25,000 | | 20,000 | | 5,000 | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **திருத்தம் மற்றும் பராமரித்தல் செலவினம்** | | **2,250,000** | | **1,943,742** | | |
| 03/06 | வாகன பேணுகையும் காப்புறுதியும் | 1,350,000 | | 1,357,884 | | **(7,884)** | வாகனங்கள் பழமையாக காணப்படுவதனால் எதிர்பாராத திருத்தம் ஏற்படுகின்றது. |
| 03/07 | அலுவலக கட்டிடப் பேணுகை | 300,000 | | 350,417 | | **(50,417)** | பேணுகைக்கான கட்டணம் உயர்வடைந்தமை |
| 03/07A | அலுவலக உபகரண பேணுகை | 600,000 | | 235,441 | | 364,559 | |
| | | | | | | | |
| | **ஒப்பந்த சேவைகள்** | | **15,284,000** | | **13,692,306** | | |
| 03/08 | போக்குவரத்து | 150,000 | | 108,837 | | 41,163 | |
| 03/09 | தபால் கட்டணம் | 350,000 | | 190,916 | | 159,084 | |
| 03/10 | தொலைபேசி | 1,000,000 | | 858,914 | | 141,086 | |
| 03/11 | தெலைநகல்/மின்னஞ்சல் இன்ா்நெட் | 500,000 | | 296,951 | | 203,049 | |
| 03/12 | மின்சாரம் | 1,200,000 | | 1,090,019 | | 109,981 | |
| 03/13 | நீா் | 50,000 | | 46,880 | | 3,120 | |
| 03/14 | கட்டிட வாடகை | 6,210,000 | | 6,210,000 | | | |
| 03/15 | காப்புறுதி | 3,200,000 | | 2,758,501 | | 441,499 | |
| 03/16 | கணக்காய்வு | 200,000 | | | | 200,000 | |
| 03/17 | சட்டம் | 9,000 | | | | 9,000 | |
| 03/18 | விளம்பரம் | 250,000 | | 147,775 | | 102,225 | |
| 03/19 | செய்திப்பத்திரிகை அங்கத்துவக் கட்டணம் | 30,000 | | 25,890 | | 4,110 | |
| 03/20 | அச்சிடல் மற்றும் பிரசுரங்கள் | 300,000 | | 310,327 | | **(10,327)** | பல கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| 03/21 | வரவு வரியும் வங்கிக் கட்டணங்களும் | 5,000 | | | | 5,000 | |
| 03/22 | ஊழியா் நலன்புரி | 440,000 | | 338,954 | | 101,046 | |
| 03/23 | வரியும் முத்திரை தீா்வையும் | 10,000 | | 15,785 | | **(5,785)** | வரி வீதம் அதிகரித்தமை |
| 03/24 | நானாவிதம் | 100,000 | | 28,857 | | 71,143 | |
| 05/02 | கடன்களும் முற்பணமும் | 1,280,000 | | 1,263,700 | | 16,300 | |
| | | | | | | | |
| | **ஏனைய கொடுப்பனவுகள்** | | **3,770000** | | **3,373,354** | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01/01 | சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அங்கத்தவர்கள் கொடுப்பனவு | 510,000 | | 432,000 | | 78,000 | |
| 01/02 | சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அங்கத்தவர்கள் பிரயாணம் | 255,000 | | 255,000 | | | |
| 01/03 | சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அங்கத்தவர்கள் உபசாரம் | 35,000 | | 34,587 | | 413 | |
| 01/04 | பதவியினர் உள்ளுர் பயிற்சி நிகழ்ச்சிகள் | 71,000 | | 66,500 | | 4,500 | |
| 01/05 | வருகை விஞ்ஞானிகளிற்கான இடைநேர் செலவினம் | 50,000 | | 38,142 | | 11,858 | |
| 01/06 | பயிற்சி நிகழ்ச்சிகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் | 1,400,000 | | 1,158,651 | | 241,349 | |
| 01/07 | களப்பரிசோதனை கட்டணங்கள் | 250,000 | | 201,425 | | 48,575 | |
| 01/08 | கதிர்வீச்சு தொழிலாளர்களிற்கான மருத்துவ பரிசோதனை | 710,000 | | 698,028 | | 11,972 | |
| 01/09 | ஐஏஈஏ இன் பிரதிப் பணிப்பாளர் வருகைச் செலவு | 489,000 | | 489,021 | | **(21)** | விலைத் தளம்பல் காரணமாக |
| | | | | | | | |
| | **மொத்த மீண்டுவரும் செலவினம்** | | **57,500,000** | | **53,312,678** | | |

1 முதல் 26 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்கள் நிதி அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகியுள்ளதாக இதன் கீழ் கையொப்பமிட்டுள்ள இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் கணக்காளர் மற்றும் பணிப்பாளர் நாயகமாகிய நாங்கள். கூட்டாக சான்றுறுதிப்படுத்துகின்றோம்.

கணக்காளர் பணிப்பாளர் நாயகம்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள், இந் நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணிப்பாளர் சபையின் சார்பில் அங்கீகரித்துக் கையொப்பமிடுகின்றோம்

தலைவர் சபை உறுப்பினர்

பிஓஈ/பீ/எஸ்எல்ஏஈஆர்சீ/எவ்ஏ/2018 2019 ஏப்ரல் 12

பணிப்பாளர் நாயகம்
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைந்த

நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது

விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள், அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 12 ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேரவையால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- பேரவையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன என்பதும்,

- முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன என்பதும்,

- பேரவையால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை நம்புவதற்கான காரணங்கள் எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை என்பதும் ஆகும்.

(இ) கணக்காய்வு விடயங்கள், இவ் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்ற பின்வருவன தொடர்பான பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்குதல்.

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் ஆற்றப்பட்டமை.

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருந்தமை.

**2.1 ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினர்களால் வழங்கப்பட்ட எழுத்தினாலான சட்டங்கள், விதிகள் அல்லது ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காமை**

---

1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் பொது நிர்வாக அமைச்சினால் அல்லது திறைசேரியினால் குறிப்பாக அனுமதிக்கப்பட்ட நலன்கள் ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட வேண்டும். எனினும் அத் தேவைப்பாட்டிற்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மாத்திரம் கதிர்வீச்சு பாதுகாப்பு மேற்பார்வையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 70,780 தொகையும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 157,420 தொகையுமாக ரூபா 228,200 கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் இது அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் அவ்வாறே மீளாய்வாண்டின் போதும் ரூபா 201,425 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.2 பேரவையின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுடன் இணங்குதல்**

---

**2.2.1 அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களிற்கிணங்க கடமைகளின் குறைவான செயலாற்றல்**

---

(அ) 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கிணங்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையை ஸ்தாபித்த நோக்கங்களை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

- 10 (அ) பிரிவின் பிரகாரம் அயனாக்கல் கதிர்வீச்சு வெளிப்பாட்டுடன் இணைந்த ஆபத்துக்களிற்கு எதிராக ஆட்களையும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்கும் பொருத்தமானவாறு காப்பதற்கும் மூலங்கள் மற்றும் வசதிகளைப் பாதுகாப்பதற்குமான தேவைப்பாடுகளை ஸ்தாபித்தல்.

- 10 (ஆ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் மூலம், அணுப்பொருள் மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருள் காரணமாக எழும் தீங்கான பாதிப்புக்களிலிருந்து ஆட்களையும் சூழலையும் பாதுகாப்பதையும் அத்தகைய பொருளினது பாதுகாப்பையும் வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான அனைத்து நடடிக்கைகளையும் எடுத்தல்.

மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான பேரவையின் தொழிற்பாடுகள் 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ளன. பிரிவின் (ஈ) பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்குவதையும் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளை வலுப்படுத்துவதையும் உறுதிப்படுத்துவதற்கு பேரவையால் போதியளவு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) நாட்டின் தனியார் வைத்தியசாலைகளுடன் தொடர்புபட்ட அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்பான நடைமுறைகளை நிர்வகிப்பதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் அவ் வைத்தியசாலைகளால் தர அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட வேண்டிய போதிலும் 3 மாவட்டங்களிலுள்ள 20 தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரீட்சிப்பின் போது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஊடுகதிர் (x-ray) சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆறு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் உரிமம் பெற்ற நிறுவனங்கள் இணங்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அமுல்ப்படுத்தப்பட்ட ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தில் பேரவையால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்

அளவுத்திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் கதிர்வீச்சு அளவு வீதத்தை (radiation dose rate) அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட 39 உபகரணங்களில் 25 மற்றும் கதிர்வீச்சு அளவை (radiation dose) அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட 25 உபகரணங்களில் 23 அளவுத்திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளுடன் அந் நிறுவனங்கள் இணங்கியுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு முன் அறிவித்தலின்றி 26 நிறுவனங்களில் களப் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 3 நிறுவனங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் அவ் அனுமதிப்பத்திரங்களில் சுட்டிக்காட்டப்பட்ட விதிகளுடன் இணங்கியிருந்தனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 1999 இன் 1 ஆம் இலக்க கதிர்வீச்சுப் பாதுகாப்புப் பிரமாணங்களிற்கு இணங்க பேரவையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களையுடைய 28 நிறுவனங்கள் Thermo Luminescence Dosimeter (TLD) கார்ட்களை (cards) பயன்படுத்தியிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் (National Nuclear Radiological Emergency Response Plan)**

தேசிய இடர் செயற்பாட்டுத் திட்டத்தின் போது 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய இடர் செயற்பாட்டுத் திட்டத்தில் அணுசக்தி அல்லது கதிர்வீச்சியல் அவசரகால நிலைமையொன்றிற்கு முககங்கொடுக்கும் போது இனங்காணப்பட்ட தேசிய தொழில்நுட்ப நிறுவனங்களாக "தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம்" இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையால் தயாரிக்கப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டிலிருந்து இது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவசரகால நிலைமையை எதிர்கொள்ளும் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான

நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படுதல்

### 2.3.1 முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

#### (அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பேரவையின் செயலாற்றல் பின்வருமாறுள்ளது.

- **விதிகள் மற்றும் பிரமாணங்களைத் தயாரித்தல்**

  இறக்குமதி செய்யப்பட்ட உணவின் கதிர்வீச்சு மட்டம் தொடர்பான விதிகள், அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு மீதான பிரமாணங்கள் மற்றும் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு மீதான பிரமாணங்கள் என்பவற்றை தயாரிப்பது தொடர்பான செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஆரம்ப வரைபுகள் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கான கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக இறுதி வரைபை சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பக் கட்ட வரைபை தயாரிப்பதிலேயே காணப்பட்டது.

#### (ஆ) செயற்பாட்டு முறைமையுடன் இணங்காமை

2014 இன் 40 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11(அ) பிரிவின் கீழ் உரிய நிறுவனங்களிற்கான அயனாக்கல் கதிர்வீச்சை கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையால் மேற்கொள்ளப்படுகின்றது. பதுளை மாவட்டத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 8 நிறுவனங்கள் தொடர்பாக

மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரீட்சிப்பின் போது 3 நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள ஊடுகதிர் இயந்திரங்களில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் ஒத்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(இ) மூலங்கள் உள்ளடங்கிய தேசிய பதிவேடொன்றைப் பேணுதல்

இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற கதிரியக்கப் பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு துணைப்பொருட்கள் தொடர்பான தரவுகள் உள்ளடங்கிய பதிவேடொன்றை பேணுவதற்காக ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தகவல் முறைமை (ஆர்ஏஐஎஸ்) எனும் பெயரையுடைய மென்பொருள் உள்ளடங்கலாக ரூபா 2,138,525 பெறுமதியான உபகரண முறைமையொன்று 2017 ஆம் ஆண்டில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 205 நிறுவனங்களிற்கான தரவுகளின் சேகரிப்பு இவ் மென்பொருளால் பேணப்பட வேண்டிய போதிலும் 30 நிறுவனங்கள் தொடர்பான தரவுகள் மாத்திரமே இவ் மென்பொருளின் தரவு சேகரிப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

முதலாவது அனுமதிப்பத்திரம் உரிய திகதிக்கு முன்னரே ஒன்று தொடக்கம் ஆறு ஆண்டுகள் வரையில் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள சபையின் 5 உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்தன. எனினும் நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இது தொடர்பில் சீராக்கம் செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பேரவையின் பணிப்பாளர் நாயகம் இது தொடர்பான தனது யோசனையை பின்வருமாறு வெளிப்படுத்தியிருந்தார்.

2010 ஆம் ஆண்டில் அணுசக்தி அதிகாரசபைக்கு எதிராக அணுசக்தி அதிகாரசபையின் ஊழியரொருவரால் அவரை 2006 ஜேஎம்ஜ 1 சம்பள குறியீட்டில் வைத்திருப்பதற்காக தொடரப்பட்டிருந்த எஸ்சீ.எவ்ஆர்.662/2010 ஆம் இலக்க வழக்கிற்காக அணுசக்தி அதிகாரசபை மற்றும் நிதி அமைச்சு உள்ளடங்கிய சில நிறுவனங்களின் சார்பில் தோன்றியிருந்த சட்டமா அதிபரால் உச்ச நீதிமன்றத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையுடன் தமது நிறுவனம் திருப்திப்படுகின்றதுடன் அவ் உடன்படிக்கைக்கு இணங்க அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் தவறு காணப்படவில்லை. ஆகையால்

இது தொடர்பில் வேறு ஏதாவது நடவடிக்கையை எடுப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படவில்லை.

எவ்வாறாயினும் 2016 சனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் எம்எம் சம்பளக் குறியீட்டில் உத்தியோகத்தரை வைத்திருப்பதற்கு அணுசக்தி அதிகாரசபையால் 2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் வழக்குத்தொடுநரால் வழக்கு மீளப்பெறப்பட்டிருந்தது. சபையால் வழக்குத் தொடுநருடன் உடன்படிக்கையை மேற்கொண்ட போது அனைத்துப் பிரதிவாதியினதும் உடன்படிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானம் மீது மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பணிப்பாளர் சபை செயற்பட்டிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட வழக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கொன்றாக காணப்படாததுடன் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வழக்கு உடன்படிக்கைக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.

## 2.4 ஏனைய முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயன்முன்னேற்றம்

(அ) அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான நிலுவையாகவுள்ள பௌதீக மற்றும் மனித வளங்களை 2019 பெப்ரவரி 15 வரையிலும் சபையால் நிரப்ப முடிந்திருக்கவில்லை.

(ஆ) 2018 ஆம் ஆண்டிற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காகவும் களப் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிற்காகவும் ரூபா 48 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தியின் கீழ் திட்டமிடப்பட்ட முன்னேற்றப்பட்ட செயற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பௌதீக வசதிகளை (வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் வாகனங்களை வாடகைக்கு பெறுதல்) வழங்குவதற்காக போதியளவு நிதியேற்பாடுகள் காணப்படாததன் காரணமாக தூரப் பிரதேசங்களில்

மேற்கொள்ளப்பட வேண்டிய கதிர்வீச்சு மேற்பார்வையில் தாமதங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 2.4.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல். | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்காமை. |
| (ஆ) | பேரவையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான தொழிற்பாடுகள் | பேரவையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அதற்கமைய குறித்த கணக்காய்வு அவதானிப்புக்களிற்கான தெளிவுபடுத்தல்களும் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் கீழ்க் குறிப்பிட்டப்பட்டவாறு சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

**2. ஏனைய நியதிச்சட்ட மற்றும் பிரமாண தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

**2.1. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

இந்த விடயத்தின் கீழ் உங்களது அவதானிப்பிற்காக எமது கருத்தினைத் தெரிவித்து உங்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 2018.11.09 ஆந் திகதிய SLAERC/IA/17 ஆம் இலக்க கடிதத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பேரவையினை நடாத்திச்செல்வதற்கும் பொதுமக்களிற்கான சேவையினை தொடர்வதற்கும் 2015.02.23 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய பேரவை செயற்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு தொடர்பில் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், கதிர்வீச்சுப் பாதுகாப்பு பரிசோதனைகளை தடைகளின்றி மேற்கொள்வதனால் பொதுமக்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகின்றது என்பது பணிப்பாளர் சபையின் அபிப்பிராயமாக காணப்பட்டது.

அவ்வாறே, ஒருசில தூரப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நிலவரங்களின் படி, தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்தல் கடினமாக உள்ளது. ஆகையால், அவசர நிலைமைகளில் எவ்வித முன்னேற்பாடுகளுமின்றி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றமை பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதற்கமைய, இக்கொடுப்பனவை நிறுத்துவதற்கு இதுவரை எனக்கு அறிவுறுத்தல் கிடைக்கவில்லை. இக்கொடுப்பனவைச் செலுத்துதல் அத்தியாவசியமானதாக காணப்பட்டமையால் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**2.2.1 சட்டத்திலுள்ள குறிக்கோள்களின் பிரகாரம் செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.**

**(அ)** இது தொடர்பில் நீண்ட தெளிவுபடுத்தலொன்று எனது 2019.03.12 ஆந் திகதி கடிதத்தின் ஊடாக உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், எமது பரீட்சகர்களால் இது தொடர்பில் பரிசோதிக்கப்பட்டதுடன், அந்த அனுமதிப்பத்திர தகவல்களும் இயந்திரங்களின் தகவல்களும் அவர்களது அவதானிப்பின் படி திருத்தமானது என்பதனை பணிவுடன் அறியத்தருகின்றேன்.

**i** அனுமதிப்பத்திரமின்றி எக்ஸ் கதிர் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற நிறுவனங்களை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள் முன்னறிவித்தல் வழங்கப்படாது நாடுமுழுவதுமுள்ள பல்வேறுபட்ட பிரதேசங்களில் எழுமாற்றாக பேரவையினால் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறான 28 இடங்கள் 2018 இல் கண்டுபிடிக்கப்பட்டு பேரவையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டுவரப்பட்டமையால் அந்த இடங்களினால் அனுமதிப்பத்திரம் பெறுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டினை எதிர்காலத்திலும் மேற்கொண்டு மேலும் அவ்வாறான இடங்களையும் அவ்வாறான வேறு இடங்கள் காணப்படின் அவற்றையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி, அந்த இடங்கள் தொடர்பில் உரியவாறு செயற்பட்டு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. உங்களது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 06 நிறுவனங்கள் தொடர்பில் எம்மால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஒழுங்குபடுத்தலிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ii பேரவையினால் திடீர் களப் பரிசோதனைகளிற்காக பயன்படுத்துகின்ற அநேக உபகரணங்கள் புதிய உபகரணங்களாகக் காணப்பட்டமையால் தற்போது அவற்றை அளவுத் தரப்படுத்தல் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கவில்லை. இருப்பினும் அளவுத் தரப்படுத்தல் செய்யப்பட வேண்டிய உபகரணங்களை சபைக்கு அனுப்பிவைத்து காணப்படும் நிதி ஏற்பாடுகளிற்கமைய அளவுத் தரப்படுத்தல் செய்யப்பட்டுள்ளன.

iii புதிய நிறுவனங்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் குறித்த பரிசோதனைகளிற்காக பரிசோதகர்களை ஈடுபடுத்துவதற்கு முன்னுரிமை வழங்கியமையால் உங்களது ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பட்டியலிடப்பட்ட அனைத்து மேலதிக பரிசோதனைகளையும் மேற்கொள்வதற்கு முடியாது போயிருந்தது. அத்துடன், தற்போதுள்ள பரிசோதகர்களின் எண்ணிக்கை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற இடங்களையேனும் பரிசோதிப்பதற்கு போதுமானதாக இல்லாமையால் இதற்காக மேலும் 04 பரிசோதகர்களை புதிதாக ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இருப்பினும், 2018.12.31 ஆந் திகதி வரை அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை. மேலும், அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் குறித்த அனுமதிப்பத்திரங்களிலுள்ள நிபந்தனைகளிற்கு அமைவாக செயற்படுகின்றனவா என்பதனை கண்டறிவதற்காகவே இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரதேசங்களிலுள்ள நிறுவனங்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் பரிசோதனைகளிற்காக விஜயம் செய்கின்ற சந்தர்ப்பங்களிலேயே இப்பிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், இப்பரிசோதனைகளிற்காக முன்னுரிமை வழங்குவதற்கு முடியாதுள்ளது. இருப்பினும், மேற்படி பட்டியலிலுள்ள எஞ்சிய இடங்கள் எதிர்வரும் ஆண்டுகளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

iv. TLD அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பேரவையினால் அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிவுறுத்தலின் பின்னர் செயன்முன்னேற்றம் காணப்படுகின்றது. இருப்பினும், TLD அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரி இந்த சகல நிறுவனங்களிற்கும் மீண்டும் எச்சரிக்கை கடிதங்கள அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ) தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் (National Nuclear Radiological Emergency Response Plan)**

தேசிய அணு மற்றும் கதிர்வீச்சு அவசரகால முகாமைத்துவத் திட்டத்தின் முதலாவது வரைபு தயாரிக்கப்பட்டு சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் நிபுணரால் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது. சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் நிபுணரின் ஆலோசனையின் பிரகாரம் 2019 இன் முதல் இரண்டு காலாண்டுகளின் போது வரைபினை பூரணப்படுத்தி அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும்.

**2.3.1 செயற்பாட்டு மீளாய்வு**

**---------------------------**

**செயலாற்றல்**

**-----------------**

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2018 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, பேரவையின் செயலாற்றல் தொடர்பில் தொடுக்கப்பட்ட வினாவிற்கு "பிரமாணங்கள் மற்றும் விதிகளை வகுத்தல்" என்பதன் கீழ் ஒத்த இலக்கமுடைய 2019.03.06 ஆந் திகதிய எனது கடிதத்தினால் இது தொடர்பிலான அனைத்து விளக்கங்களும் என்னால் உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கையினை எதிர்வரும் வருடத்தில் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(ஆ) செயற்பாட்டு முறைமைக்கு இணங்க செயற்பட்டிருக்காமை.**

இது தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டதுடன் குறித்த பரிசோதனையில் அனுமதிப்பத்திரத்திலும் ஒ-கதிர் இயந்திரங்களிலும் காணப்பட்ட இலக்கம் ஒத்தவை என்பது தெளிவாகியது. இருப்பினும்,

எதிர்காலத்தில் இது தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**(இ) மூலங்களை உள்ளடக்கிய தேசிய பதிவேடொன்றைப் பேணுதல்.**

Regulatory Authority information System (RAIS) மென்பொதியின் ஊடாக தரவுகளை உள்ளடக்குதல் ஒழுங்குசெய்யப்பட்டு 2018 மே மாதத்தில் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கமைய, திசெம்பர் மாதம் வரையில் ஏறத்தாழ 30 நிறுவனங்களின் தரவுகள் அதில் உள்ளடக்கப்பட்டன.
நிறுவனத்திலுள்ள விஞ்ஞான உத்தியோகத்தர்கள் தமது நாளாந்த கடமைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம் இந்தப் பணிகளையும் மேற்கொள்ளவேண்டியுள்ளதுடன், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இதற்காக புறம்பான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு பேரவைக்கு முடியாதுள்ளது. மேலும், சில நிறுவனங்களில் கதிர்வீச்சு மூலங்கள் குறித்த தரவுகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றமையால் (உதாரணமாக: என்சல் லங்கா கம்பனி மற்றும் ஸ்ரீ லங்கா கெமா நிலையம்) அவற்றை முறைமையில் உள்ளடக்குவதற்கு அதிகளவு காலம் தேவைப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக எம்மால் கதிர்வீச்சு மூலங்கள் குறித்த தனியான பட்டியலொன்றும் (Word Document) நாளதுவரையாக பேணப்படுகின்றது. அதற்கமைய, எமது நிறுவனத்தில் மூலங்கள் தொடர்பான தேசிய பட்டியலொன்று காணப்படுகின்றது.

## 2.3.2 சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

-----------------------------------------------------------------------------------------------

இது தொடர்பில் 2019.03.06 ஆந் திகதி என்னால் உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதலிளித்தல்கள் தொடர்ந்தும் மாற்றமின்றிச் செல்லுபடியாகும். அதனை கீழுள்ளவாறு மேலும் விளக்குகின்றேன்.

அணுசக்தி அதிகாரசபை, நிதி அமைச்சு உள்ளிட்ட சில நிறுவனங்கள் சார்பாக தோன்றிய சட்டமா அதிபர் அவர்களினால் உயர் நீதிமன்றத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடு தொடர்பில் எமது நிறுவனம் திருப்தியடைவதுடன், அந்த இணக்கப்பாட்டிற்கு அமைய, அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தவறானது என நாம் நம்பவில்லையாதலால் இது தொடர்பில் வேறெவ்வித நடவடிக்கையினையும் எடுக்க முடியாதுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

## 2.4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல் செயன்முன்னேற்றம்

-----------------------------------------------------------------------------------------------

**(அ)** 2015.01.01 இல் பேரவை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் தேவையான இட வசதி இந்த நிறுவனத்தினை வினைத்திறனாக நடாத்திச்செல்தற்கு போதியதாக இருக்கவில்லை. இந்த இடவசதியினை பெற்றுத்தருமாறு அணுசக்தி சபையினை அன்றுமுதல் கோரியிருந்த போதிலும், அதனை இதுவரை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. இந்த நிலைமை குறித்து மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சிற்கும் அறிவிக்கப்பட்டு 2016, 2017, 2018 மற்றும் 2019 காலப்பகுதிகளில் பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து நிதி ஏற்பாடு கோரப்பட்ட போதிலும் அது இதுவரை வழங்கப்படவில்லை.
தேவையான இடவசதி இன்மையால் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு செத்சிரிபாய III ஆம் கட்டத்தின் கீழ் 12,000 சதர அடி இடவசதி கோரப்பட்டுள்ளது. இருப்பினும் அந்தக் கோரிக்கையினை 2022 ஆம் ஆண்டுவரை நிறைவேற்ற முடியாதென எமக்கு அறியக் கிடைத்துள்ளது.
இந்த நிலைமையின் கீழ், தேவையான இடவசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு வேறெதனையும் செய்யமுடியாத நிலையில் நாம் இருப்பதுடன், இது குறித்து மீண்டும் அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பற்றாக்குறையாகவுள்ள வளங்களான 05 கணனிகளை இவ்வாண்டில் கொள்வனவு செய்வதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
பேரவையில் இந்த 04 பதவி வெற்றிடங்களிற்கு மேலதிகமாக 04 விஞ்ஞான உத்தியோகத்தர்கள், 01 சாரதி, 02 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிகளும் தேவைப்படுகின்றன என்பதனை நாம் பரிந்துவைத்துள்ளோம்.
இருப்பினும், இப்பதவிகள் 2018.12.31 வரை அங்கீகரிக்கப்படாதிருப்பதுடன், அதற்கான நிதி ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. அத்துடன், இப்பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட போதிலும்,

தேவையான இடவசதிகள் இல்லாமையால் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய குறித்த இலக்குகள் அடையப்படும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

(ஆ) அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் களப் பரிசோதனை நடவடிக்கைகளிற்கான போக்குவரத்து வசதிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையாகவுள்ள வாகனங்களின் விபரங்கள் அமைச்சின் ஊடாக அரச பாதீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக 02 வாகனங்களை தந்துதவுமாறு அல்லது இரண்டு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாட்டினை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. எனினும், இதுவரை அதற்கு பதிலளிக்கப்படாமையால், மீண்டும் நிதி ஏற்பாட்டினைக் கோருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், போக்குவரத்துப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக 02 வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இவ்விடயம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பவுள்ளது.

### 2.4.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

இந்த விடயத்தின் கீழுள்ள பின்வருவன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமாக எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், சுற்றறிக்கைகளுடன் இணக்கமின்மைகள்.

(ஆ) பேரவையின் குறிக்கோள்களுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள்

நன்றி
இப்படிக்கு உண்மையுள்ள



எச்.எல். அணில் ரன்ஜித்
பணிப்பாளர் நாயகம்
**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை**